பக்கங்கள்: 12
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 தை 13 ஞாயிற்றுக்கிழமை 27.01.2019 கதிர் 83

**இனி அது ரகசியம் அல்ல!**

முன்னால் வந்த காதை பின்னால் வந்த கொம்பு மறைப்பது' என்பார்கள்.

வலி.வடக்குப் பிரதேச சபைத் தலைவர் சுகிர்தனின் நிலைமையும் இப்படித்தான் ஆகியிருக்கின்றது.

கட்சித்தலைவர் மாவை சேனாதி ராசாவுக்கு பந்தம் பிடிக்கின்றோம் என்று நினைத்துக் பக்கம் 02

# எமது நிலம் எமக்கு வேண்டும்!

## அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் கேப்பாபிலவில் போராட்டம்

முல்லைத்தீவு,ஜன. 27

கேப்பாபிலவு மக்கள் தமது காணிகளை விடுவிக்க வலியுறுத்தி முன்னெடுத்து வரும்தொடர்போராட்டத்தின்697ஆவது நாளான நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

போராட்டக்காரர்கள் கேப்பாப்பிலவு பிரதான வாயிலில் தமது ஆர்ப்பாட்டத்தைத் தொடங்கி, கேப்பாபிலவு இராணுவ முகாம் வரை ஊர்வலமாகச் சென்று, இராணுவ முகாமின் வாயிலின் முன்பாகவும் தமது ஆர்ப்பாட் பக்கம் 11




# புதிய அரசமைப்பால் நாட்டுக்கு பேராபத்து!

## எச்சரிக்கின்றார் கோட்டாபய



கொழும்பு, ஜன. 27

புதிய அரசமைப்பு மாகாண சபைகளைப் பலப்படுத்தி, மத்திய அரசைப் பலவீனப்படுத்தும். இதனால் நாடு ஆபத்தான நிலைக்குள் தள்ளப்படும்.

இவ்வாறு எச்சரித்துள்ளார் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ. பக்கம் 11

## சுதந்திரக் கட்சிக்கு இப்போது புதிய தலைமை மிக அவசியம்

### குமார வெல்கம வலியுறுத்து



கொழும்பு, ஜன. 27

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்குச் சிறந்த புதிய தலைமை அவசியம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார். புதிய பக்கம் 11

## கோட்டாபயவுக்கு மஹிந்தர் காட்டினார் பச்சைக்கொடி!

கொழும்பு, ஜன. 27

ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராகுமாறு, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பக்கம் 11

## பிரிட்டனில் தேடப்படுபவர்களின் பட்டியலில் பிரிகேடியர் பிரியங்க!

கொழும்பு, ஜன. 27

பிரிட்டனில் இலங்கைத் தூதரகப் பாதுகாப்பு ஆலோசகராக கடமையாற்றிய பிரிகேடியர் பிரியங்க பக்கம் 11

## புதிய அரசமைப்பை நிறைவேற்ற அரசுக்கு பெரும்பான்மை இல்லை

### அடித்துக் கூறுகின்றார் மஹிந்த

கொழும்பு, ஜன. 27

புதிய அரசமைப்பை நிறைவேற்ற அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லை பக்கம் 11

## 110 கிலோ கஞ்சாவுடன் மூவர் வல்வெட்டித்துறையில் கைது

யாழ்ப்பாணம், ஜன. 27

வல்வெட்டித்துறையில் சுமார் 110 கிலோ கிராம் எடையு பக்கம் 11

## மன்னார் புதைகுழி எச்சங்கள் புளோரிடாவை சென்றடைந்தன

மன்னார் மனிதப் புதைகுழியிலிருந்து எடுக்கப்பட்ட மனித எச்சங்களின் மாதிரிகள் பக்கம் 11

## இலங்கைப் படையினர் மீதான மாலித் தாக்குதல் போர்க்குற்றம்!

### ஐ.நா. பொதுச் செயலர் கண்டனம்

நியூயோர்க், ஜன. 27

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் ஐ.நா. அமைதிப்படையில் இடம்பெற்றிருந்த இரண்டு இலங்கைப் படையினர், கொல்லப்பட்டது. ஆறு பேர் காய பக்கம் 11

## படுகொலையான ஊடகவியலாளர்களுக்கு நீதி கேட்டு யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்பு!

கொழும்பு, ஜன. 27

ஊடகவியலாளர்களின் படுகொலைக்கு நீதி கோரி யாழ்ப்பாணத்தில்கவனவீர்ப்புப்போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலையில் 2016 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட பக்கம் 11



## புலிகள் நடமாட்டம் எனக்கூறி வவுனியாவில் தீவிர தேடுதல்!

### குஞ்சுக்குளம் பகுதியில் பதற்றம்



வவுனியா, ஜன. 27

விடுதலைப் புலிகளின் நடமாட்டம் காணப்படுவதாகக் கூறி வவுனியாவில்படையினர்தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வவுனியா, பக்கம் 11

## 249 ஆசிரியர்களுக்கு நேற்று நியமனக் கடிதம்

### வடக்கு ஆளுநர் வழங்கினார்



யாழ்ப்பாணம், ஜன. 27

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற் பக்கம் 11

## சந்திரிகா – வெல்கம இரகசியச் சந்திப்பு!

### கலக்கத்தில் மைத்திரி – மஹிந்த தரப்பு

கொழும்பு, ஜன. 27

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கும், குமார வெல்கம எம்.பிக்குமிடையில் இரகசியச் பக்கம் 11

## சு.க. உறுப்பினர்களுடன் உலகம் சுற்றும் மைத்திரி!

### கடும் விசனத்தில் ஐ.தே.க.

கொழும்பு, ஜன. 27

சிங்கப்பூருக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத் பக்கம் 11

# வீஸா காலாவதியான 24 இந்தியர்கள் கைது!

கொழும்பு, ஜன. 27

வீஸா காலாவதியான நிலையில், சட்டவிரோத மான முறையில், நாட்டில் தங்கியிருந்த 24 இந் தியப் பிரஜைகளை, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இங்கிரிய பிரதேசத்திலுள்ள தொழிற்சாலை யொன்றில் பணியாற்றிக் கொண்டிருந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த 24 பேரும் சுற்றுலா வீஸாவிலேயே இலங்கைக்கு வந்துள்ளனர் என்றும் வீஸா காலம் நிறைவடைந்த நிலையில், இலங்கையிலேயே தங்கியிருந்துள்ளனர் என்றும் அதிகாரிகள் தெரி வித்தனர். கைது செய்யப்பட்டவர்கள், மிரிஹான தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு, விசார ணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர் எனத் தெரி விக்கப்படுகின்றது. (ஐ)

## மஹிந்த வீட்டுத் திருமணத்தில் பங்கேற்காது தவிர்த்தார் பஸில்

### விரிசல்களின் உச்சக் கட்டமா?

கொழும்பு, ஜன. 27

மஹிந்த ராஜபக்ஷவின் இளைய மகன் ரோஹித ராஜபக்ஷவின் திருமணம் கடந்த வியாழன் இடம்பெற்றது. இந்தத் திருமண விழாவில், மஹிந்தவின் சகோதரரான பஸில் ராஜபக்ஷ கலந்து கொள்ள வில்லை. இது அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அரசியல் பிரச்சினை இருந்தாலும் குடும்ப நிகழ்வில் ராஜபக்ஷ சகோதரர்கள் அனைவரும் கலந்து கொள்வது வழமை. எனினும் குடும்பத்துக்குள் ஏற்பட்டுள்ள தீவிர பதவி மோதலே இந்த நிலைக்கு காரணம் எனக் கூறப்படுகிறது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு, கட்சியின் 'நிரந்தரப் பொருளாளர்' கனகசபாபதியுடன் சேர்ந்து சுகிர்தன் பண்ணிய திரு விளையாடல் அவருக்கே இப் போதுவினையாக மாறத்தொடங்கி விட்டதுதான் விசித்திரம்.

யுத்த காலம் எல்லாம் வெளி நாட்டில் தங்கியிருந்து, கல்வி பயின்று, வேலையும் பார்த்து விட்டுஅண்மையில்தான்நாட்டுக்க மீள இறக்குமதியானார் மாவை யின் புத்திரர்.

வலி.வடக்கில் மாவையருக்கு இருக்கும் செல்வாக்கைப் பயன் படுத்தி, வாரிசு அரசியலுக்கு சுழி போட்டார் மாவையரின் பிரதான எடுபிடியான கனகசபாபதி. அதற்கு ஒத்து ஊதினார் சுகிர்தன் – மாவை யரைத் திருப்திப்படுத்துவதற்காக.

அது குறித்தெல்லாம் இப்பத்தி யில் ஏற்கனவே அவ்வப்போது நான் பிரஸ்தாபித்துள்ளமை வாச கர்களுக்கு நினைவிருக்கலாம்.

முதலில் பிரதேச சபை, பிறகு மாகாண சபை, தொடர்ந்து வலி. வடக்கின் நாடாளுமன்ற பிரதிநி தித்துவம் என்ற 'புரோமோன்' ஒழுங்கை இலக்குவைத்தே மாவை யரின் மகனை முன்தள்ளும் முயற்சி அரங்கேறுகின்றது என்று அப்போதே கோடி காட்டியிருந் தேன்.

அது இப்போது கட்டவிழத் தொடங்கிவிட்டது. அதுதான் மாவையரின்மகனைக்கொண்டு வந்த சுகிர்தனுக்கும் ஆப்பாகி யிருக்கின்றது.

மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் இலக்குத் தமக்கு இல்லையென்றுஎன்னதான்வெளிப் பேச்சுக்கு சுகிர்தன் கூறினாலும், அரசியலில் அவரின் அடுத்த இலக்கும் போக்கும் அதுதான் என்பது உறுதி.

இப்போது வலி.வடக்குப் பிரதேச சபையின உறுப்பினராக இருக்கும் மாவையின் மகன், அடுத்து மாகாண சபைக்கு முன்நகர்வாயின் அதற்கு, கட்சிக்குள்வலி.வடக்கில்தனக்குப் போட்டியாக வரக்கூடிய தரப்புக் களைப் புறமொதுக்கி, மேவி, உயரவேண்டும். அந்தத் தந்தி ரோபாயத்தில் முதல் பலியாடு வலி. வடக்கு பிரதேச சபையின் தலைவர் சுகிர்தன்தான்.

பிரதேச சபைக்கு உள்ளும் வெளியிலும்தன்னைக்கீழ்மைப் படுத்தி, வெட்டிவிடும் சாணக்கி யத்தை மாவையின் மகன் ஆரம்பித்திருக்கின்றமை குறித் துத் தமக்கு நெருக்கமானவர் களிடம் கூறிப் பொருமுகின்றா ராம் சுகிர்தன். தீட்டிய மரத்தில் கூர்மை பார்க்கும் வேலையை மாவையின் மகன் ஆரம்பித்து விட்டார்.

வலி.வடக்கில், பல மில்லியன் ரூபா செலவில் சுகிர்தனின் தலை மையில் அமைக்கப்பட்ட வீதிகள் எல்லாம் தரம் குறைந்தவை, மோசமானவை என்ற விமரி சனத்தை பிரதேச சபைக் கூட்டத் திலும் வெளியிலும் பகிரங்கமாக அவர் அடுக்கத் தொடங்கியிருக் கின்றமை சுகிர்தனுக்கு நேரடியாக வைக்கப்பட்ட ஆப்பு.

இதுவரை காலமும் வலிகா மம் வடக்கில் மட்டுமல்லாமல், யாழ். தேர்தல் மாவட்டத்திலேயே மாவை சேனாதிராசாவின் வேலைகளைக் கையாளும் அந்தரங்கச்செயலாளர் சுகிர்தன் தான். மாவையரிடம் கையளிக்கப் படவேண்டிய திட்ட வரைவுகளைக் கூட ஏனைய கூட்டமைப்பு எம்.பி மாரே சுகிர்தன் மூலம்தான் மாவைக்கு அனுப்புவர். இப் போது அந்த நிலையும் 'அவுட்'.

வலி. வடக்கில் மேற்கொள் ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்ட முன் வரைவுகளை தம்மிடம் அனுப்பி வைக்குமாறு அப்பிர தேச உள்ளூராட்சி உறுப்பினர் களுக்குக் கடிதம் மூலம் அறி வுறுத்தியிருக்கின்றார் மாவை யின் புத்திரன்.

இதில் இரண்டு வேடிக்கை கள்.

ஒன்று – வழக்கமாக இந்த வேலைகளைக் கவனித்து வரும் சுகிர்தனுக்கும் கூட அப்படி ஒரு கடிதம் மாவையின் மகனிட மிருந்து அனுப்பப்பட்டிருக்கின்றது.

அடுத்தது – இதில் முன்பின் அனுபவமோ, பழக்கமோ இல் லாத மாவையின் மகன், இக்கடி தத்தை சுகிர்தன் தரப்பின் உதவி யின்றி எழுத வேண்டும் என்ற கவனத்தில் இருந்தால் அதில் சொதப்பி விட்டார். வீதி புனர மைப்பு, முன்பள்ளி அபிவி ருத்தி, சனசமூக நிலைய மேம்பாடு, பூங்கா அமைப்பு போன்றவை தொடர்பான திட்ட வரைவுகளை தனக்கு எழுத்தில் அனுப்பும் படி அந்தக் கடிதத்தில் கோரியுள்ள அவர், இறுதியில் *"சே.கலைய முதன், செயலாளர், உறுப்பினர், நாடாளுமன்றம்"* என்று குறிப் பிட்டிருக்கின்றார்.

யார் நாடாளுமன்ற உறுப்பி னர், யாருக்கு அவர் செயலாளர் என்ற விவரங்கள் ஏதும் கடிதத் தில் கிடையாது. தம்மைத்தான் அவர் நாடாளுமன்ற உறுப்பின ராகக் கருதிக் கொண்டாரோ என்பதும் தெரியவில்லை.

எது, எப்படியோ 'சிறை மீண்ட செம்மலாக' தம்மை அடையாளப் படுத்தி அரசியல் செய்யும் மாவை சேனாதிராஜாவுக்காக அவர் மகன் ஒப்பமிடும் வாரிசு அரசியல் கனகச்சிதமாகக் கட்ட விழத் தொடங்கிவிட்டது.

இன்னொரு திருக் கூத்தும் நடந்தது. தமிழரசுக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்கள் ஒவ்வொருவரிடமும் மாதாந்தம் ஆயிரம் ரூபா கட்சிக்காக அற விடுவது எனத் தீர்மானிக்கப் பட்டது. ஆனால் அது நடை முறைப்படுத்தப்படவில்லை. அதைத் திரட்டிக் கட்சிக்குக் கொடுக்க வேண்டியவர் கட்சியின் பிரதேச சபைத் தலைவர் சுகிர் தான்தான். அந்த நடவடிக்கை யைத் தாமே பிடுங்கி எடுத்துக் கொண்டார் மாவையின் திருச் செல்வன்.

ஒவ்வொரு பிரதேச சபை உறுப்பினருக்கும் ஒரு கடிதப் பிரதி வழங்கப்பட்டது. அந்தக் கடிதத்தில் அவர்கள் ஒப்பமிட்டு பிரதேச சபை கணக்காளரிடம் ஒப்படைத்தால் அவர்களின் மாதாந்த வேதனத்தில் இருந்து ஆயிரம் ரூபா நிதி கழிக்கப்பட்டு கட்சிக்கு அனுப்பி வைக்கப்படும்.

அந்தக் கடிதத்தில் கூட *"வலி. வடக்கின் பிரதேச சபையின் செய லர்"*, என்பதற்குப் பதிலாக *"வலி. வடக்கு பிரதேச செயலர்"* என வரையப்பட்டிருந்தது.

பிரதேச சபை என்பது உள்ளூ ராட்சி அமைப்பு, பிரதேச செயலகம் என்பது மத்திய அரசின் பிரதேச அலுவலகம். இந்த இரண்டுக் கும் வித்தியாசம். தெரியாத புது முகத்தின் கைகளில்தான் எமது எதிர்கால அரசியலை வாரிசுரி மையாக ஒப்படைப்பதற்கு முயல் கின்றார் சிறை மீண்ட செம்மல் மாவையர்.

ஏற்கனவே அரசியல் செல் வாக்கில் தமது சக்கரம் காற்றுப் போய்ப்ப் பஞ்சராகி விட்டதை உணர்ந்தவக்குஎம்.பி. ஒருவரும் மாவையின் மகனைத் தூக்கிப் பிடித்து, அதன் மூலம் கட்சிக்குள் செல்வாக்கைச் செலுத்தலாம் என்ற கனவில் மாவையின் மக னுக்கு முண்டு கொடுத்து வருகின் றார். அவரின் ஊடகமும் அதற்கு ஊதுகுழலாக நிற்கின்றது.

கட்சிக்குள் புனர்வாழ்வு, புன ரமைப்பு விவகாரங்களுக்குரிய பொறுப்புத் தமக்கு வழங்கப்பட் டுள்ள நிலையில், பிரதமர் அலு வலகம் மூலம் வடக்கு அபிவிருத் திச் செயலணிக்கு நியமிக்கப்பட்ட குழுவில் மாவையும் சேர்ந்து தம்மை வெட்டிவிட்டமையால் கடுப்பாகிப்போயுள்ள அந்த எம்.பி, தொடர்ந்தும் மாவையின் மக னுக்கு கொடி, குடை ஆலவட்டம் பிடிப்பாரா எனபது தெரியவில்லை.

ஏற்கனவே பின்கதவுச் செல் வாக்கால் இளைஞரணியின் செயலாளர் பதவிக்கு மாவை யின் மகன் முன்தள்ளப்பட்டு விட்டார். அந்த எம்.பியின் அல்லக் கையை எல்லோரும் சேர்ந்து வீழ்த்திவிட்டார்கள். அதனால் மாவையின் மகனை வைத்துக் காரியம் பார்க்கலாம் என்ற நப் பாசையில் இருக்கும் அந்த எம்.பிக்கு இப்போது கட்டவிழும் விடயங்கள் சகிக்க கஷ்டமான வையாகத்தான் இருக்கும்.

-மின்னல்-

## ஜனாதிபதியின் பரிந்துரையை நிராகரிப்பதா? அரசமைப்பு பேரவை மஹிந்த அணி பாய்ச்சல்

கொழும்பு, ஜன. 27

ஜனாதிபதியின் பரிந்துரைகளை நிராகரிக்கும் வகையில் அரச மைப்புப் பேரவை செயற்படுவது, ஏற்புடையதல்ல என ஐக்கிய மக் கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

அரசியல் ரீதியாகக் கொடுக்கப்படும் அழுத்தங்களுக்கு அமை யவே அரசமைப்புப் பேரவையின் ஊடாக நியமனங்கள் மேற் கொள்ளப்படுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

அரசமைப்புப் பேரவையின் செயற்பாடு தொடர்பில் நாடாளுமன் றத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற வாதப் பிரதிவாதத்தின்போது கருத்துத் தெரிவிக்கும்போதே தினேஷ் குணவர்தன எம்.பி இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசமைப்புப்பேரவையில் சிரேஷ்டத்துவம், திறமை என்பவற்றுக்கு மதிப்புக் கொடுப்பதில்லை. அரசியல் ரீதியான விருப்பு வெறுப்புக்கு மாத்திரமே மதிப்புக்கொடுக்கின்றனர். ஜனாதிபதியின் பரிந்துரைகளை நிராகரிக்கும் வகையில் அரசமைப்புப் பேரவை செயற்படுவது பொதுத்தமான நடவடிக்கையாக அமையாது. அரசமைப்புக்கு அமை வான கொள்கைக்கு அது முரணானதாகும். உயர்நீதிமன்றம் வழங் கிய தீர்ப்புக்கு ஜனாதிபதி மதிப்பளித்தார். எனினும், ஐக்கிய தேசியக் கட்சி தனது அதிகாரத்தைத் தக்கவைப்பதற்கு அரசமைப்புப் பேரவையில் தற்பொழுது பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது.

அரசமைப்புப் பேரவை பின்பற்றும் கொள்கை ரீதியான நடவடிக்கை என்ன என்பது கூட இதுவரை பகிரங்கப்படுத்தப்படவில்லை. ஒரு மாதம் ஒரு முடிவும், அடுத்த மாதம் மற்றுமொரு முடிவும் எடுக்கின் றனர் – என்றார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த விமல் வீரவன்ஸ எம்பி, அரச மைப்புப்பேரவையில்அரசியல்ரீதியான முடிவுகளே எடுக்கப்படுகின்றன. பிரதமர் தாக்கம் செலுத்துகின்றார். நீதித்துறை சுயாதீனமாகச் செயற் படுவதாயின், எப்.சி.ஐ.டி. சட்டவிரோதமாக அமைக்கப்பட்டது எனக்கூறி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைகள் முடிந்தும் ஏன் இன்னமும் நீதிமன்றம் தீர்ப்பை வெளியிடாமல் உள்ளது என்றும் அவர் கேள்வியெழுப்பினார். பிரதம நீதியரசராக ஈவா வனசுந்தர வின் பெயரை ஜனாதிபதி பரிந்துரைத்த போது அரசமைப்புப் பேரவை அதனை நிராகரித்தது என்றும் குற்றஞ்சாட்டினார்.

எனினும், நீதியரசர் ஈவா வனசுந்தரவின் பெயரை ஜனாதிபதி அரசமைப்புப்பேரவைக்கு ஒருபோதும் அனுப்பிவைக்கவில்லையெனச் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார். அத்துடன், அரசமைப்புப் பேரவையினால் இதுவரை எடுக்கப்பட்ட முடிவுகள் யாவும் அரசமைப்புக் உட்பட்டு சட்டரீதியான சுயாதீனமான முடிவுகளாகும். எவருடைய முகங்களைப் பார்த்தும் நாம் எந்த நியமனங்களையும் வழங்குவ தில்லையென்றார். (ஐ)

## மட்டக்களப்பில் துப்பாக்கி மீட்பு!

மட்டக்களப்பு – ஏறாவூர், ஐயங் கேணி பகுதியில் ரி–56 ரக துப் பாக்கி ஒன்றை மீட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

பொலிஸ் புலனாய்வுப் பிரி வுக்குக் கிடைத்த தகவல் ஒன்றி னையடுத்து நேற்றுக் காலை ஐயங்கேணி பிரதேசத்திலுள்ள பற்றைக்குள் இருந்து ரி–56 ரக துப்பாக்கி ஒன்று அதன் மகசீன் ஒன்று ஆகியவற்றை மீட்டனர். மீட் டகப்பட்ட துப்பாக்கி ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக் கப்பட்டுள்ளதுடன் இதுதொடர்பான விசாரணைகளை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## பால்மா விலை அதிகரிக்காது

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை அதிகரிப்பு கோரிக்கையை நுகர்வோர் அதி கார சபை நிராகரித்துள்ளது.

தற்போது நிர்ணயிக்கப்பட் டுள்ள விலைகளின்படியே பால் மாவை விற்பனை செய்ய வேண்டுமென நுகர்வோர் அதி கார சபை பால்மா உற்பத்தியா ளர்களுக்கு அறிவித்துள்ளது.

கடந்த சில வாரங்களாக இறக்குமதி செய்யப்படும் பால்மா வின் விலையை அதிகரிக்க வேண்டுமென பால்மா இறக்கு மதியாளர்கள் கோரிக்கை விடுத்து வந்த நிலையில் நுகர்வோர் அதி காரசபை இவ்வாறு தெரிவித்துள் ளது. (ஐ)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் இருவழிப்பாதையுடன் பலாலிவீதி – பருத்தித்துறை வீதி களை இணைக்கும் இடத்தில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. Hotel அல்லது பாரிய வியாபார ஸ்தலம் அமைக்க உகந்தது.

தொடர்புகளுக்கு :
077 371 6532 /
076 260 5169
(தரகர் தேவையற்றது)

# அமெரிக்க விமானம் தாங்கிக்கு இலங்கையிலிருந்து விநியோகம்


கொழும்பு, ஜன. 27

கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தில் உருவாக்கப்பட்டுள்ள தற்காலிக விநியோக மையத்தில் இருந்து, அமெரிக்க கடற்படையின் யு.எஸ்.எஸ். ஜோன் சி ஸ்ரெனிஸ் விமானந்தாங்கிக் கப்பலுக்கான பொருள்கள் விநியோகம் கடந்த வியாழன் தொடக்கம் ஆரம்பமாகி யுள்ளது.

அமெரிக்க கடற்படையின் விநியோகப் பிரிவைச் சேர்ந்த E - 2° கிறேஹவுண்ட் விமானம் ஒன்றும், E - 40° கிளிப்பர் விமானம் ஒன்றும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து ஏற்றிச் சென்ற விநியோகப் பொருள்களுடன், இலங்கை கடல் எல்லைக்கு அப்பால் அனைத்துலக கடற்பரப்பில் தரித்து நிற்கும் யு.எஸ்.எஸ். ஜோன் சி ஸ்ரெனிஸ் விமானந்தாங்கிக் கப்பலில் தரையிறங்கின.

உதிரிப்பாகங்கள், கருவிகள், தனிப்பட்ட அஞ்சல்கள், கடதாசிப் பொருள்கள், மற்றும் ஏனைய பொருள்கள் இந்த விநியோகத்தின் போது கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இந்த தற்காலிக விநியோக வசதிகள் வரும் 29ஆம் திகதி வரை தொடரவுள்ளன என அமெரிக்கக் கடற்படை அறிவித்துள்ளது.



இதற்காக கட்டுநாயக்க விமானநிலையத்தின் ஒரு பகுதியில் தனியான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

# நாட்டைப் பிரிக்கும் எண்ணம் யாழ்ப்பாண மக்களிடம் இல்லை

## அஸ்கிரிய பீட மகாநாயக்கர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 27

யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு நாட்டைப் பிரிக்கும் எண்ணம் இல்லை என்று அஸ்கிரிய பீட மகாநாயக்கர் வரக்காகொட ஞானரத்ன தேரர் தெரிவித்தார்.

பூகோள இலங்கை மன்றத்தினர் மகாநாயக்க தேரரைச் சந்தித்தபோது அவர் இந்தக் கருத்தினை அவர் வெளியிட்டார்.



நான் யாழ்ப்பாணம் சென்றிருந்தபோது, அங்குள்ள மக்கள் இலங்கைக்குள் சுதந்திரமாக வாழ வேண்டும் என்றே கோரினார்கள். நாட்டைப் பிரிக்கும் எண்ணம் தமக்கில்லை என அவர்கள் குறிப்பிட்டனர்.

அரசமைப்பு மறுசீரமைப்பை விட நாட்டு மக்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு அவசியமாகும் என்றும் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் குறிப்பிட்டார். (ஐ)

# போதைப்பொருள் கடத்தல்காரரின் சொத்துக்களை பறிக்க நடவடிக்கை

போதைப்பொருள் கடத்தல்காரர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் பயன்பாடு அதிகரித்துள்ளமை தொடர்பாக நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

போதைப்பொருள் பாவனை நாட்டின் பல பாகங்களில் அதிகரித்துள்ளமையால் அதனை கட்டுப்படுத்தும் நடவடிக்கையை தற்போது ஆரம்பித்துள்ளதாகவும் ருவன் குணசேகர சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, முக்கிய போதைப்பொருள் கடத்தல்காரர்கள் 24 பேர் நாட்டிலிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# சுதந்திர தினத்தை தேசிய தினமாக அறிவிக்கும் அவசியம் கிடையாது!

## அமைச்சர் மனோ கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஜன. 27

சுதந்திர தினத்தை தேசிய தினமாக அறிவிக்க வேண்டிய அவசியமில்லை என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

சுதந்திர தினக் கொண்டாட்டங்களைத் தேசிய தின கொண்டாட்டமாக அறிவிக்கவுள்ளதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன அண்மையில் தெரிவித்திருந்தார்.

அது தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மனோ இவ்வாறு குறிப்பிட்டார்.

சுதந்திர தினம் என்பதை மாற்றுவதற்கான எவ்வித அவசியமும் ஏற்படவில்லை என்றும் அவர் கூறினார்.

அண்மையில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் பேசிய அமைச்சர் வஜிர அபேவர்தன, அரசமைப்பின் எட்டாம் சரத்தில் சுதந்திர தினம் என்பதற்குப் பதிலாக தேசிய தினம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டினார்.

அரசமைப்பின் பிரகாரம் இனி வரும் காலங்களில் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி தேசிய தினமாகக் கொண்டாடப்படும் என்றும் குறிப்பிட்டார்.



அதன்படி, பெப்ரவரி மாதம் கொண்டாடப்படுவது தேசிய தினமே அன்றி சுதந்திர தினமல்ல எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நாடாளுமன்றத்துக்குள் அடிதடி; 59 எம்.பிக்கள் மீது நடவடிக்கை

கொழும்பு, ஜன. 27

நாடாளுமன்றத்தில் கடந்த நவம்பர் மாதம் நடந்த குழப்பங்களில் தொடர்புடைய 59 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்திய நாடாளுமன்றக் குழு பரிந்துரைத்துள்ளது.

கடந்த நொவம்பர் 14, 15, 16ஆம் திகதிகளில் சிறிலங்கா நாடாளுமன்றத்தை நடத்த விடாமல், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் ஏற்படுத்திய குழப்பம், அதையடுத்து இடம்பெற்ற மோதல்கள் தொடர்பாக விசாரிக்க பிரதிச் சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையிலான விசாரணைக் குழுவொன்றை சபாநாயகர் கரு ஜெயசூரிய நியமித்திருந்தார்.

இந்தக் குழு கடந்த செவ்வாய்க்கிழமை தமது அறிக்கையை சபாநாயகரிடம் கையளித்துள்ளது,

இந்தக் குழுவில் இணைத்துக் கொள்ளப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சமல் ராஜபக்ஷ, சந்திரசிறி கஜதீர ஆகியோர் குழுவின் விசாரணைகளில் பங்கேற்க மறுப்புத் தெரிவித்திருந்தனர்.

ஏனைய குழு உறுப்பினர்கள் நடத்திய விசாரணைகளின் முடிவில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின்படி, 59 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற விதிகள் (அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள்) சட்டத்தை மீறியுள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு குற்றம்சாட்டப்பட்டுள்ள 59 உறுப்பினர்களில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த 54 பேரும், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 4 உறுப்பினர்களும், ஜே.வி.பி. உறுப்பினர் ஒருவரும் அடங்கியுள்ளனர்.

இந்த அறிக்கையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணவீர மீது அதிகளவில், 12 குற்றச்சாட்டுகள் கூறப்பட்டுள்ளன. அதையடுத்து, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பத்ம உதயசாந்த ஆகியோருக்கு எதிராகவும் அதிகளவு குற்றச்சாட்டுகள் கூறப்பட்டுள்ளன.

குழப்பங்கள் நடந்தபோது, எடுக்கப்பட்ட வீடியோ பதிவுகள் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. இதன்படி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மிளகாய்த்தூள் வீசியது, சபாநாயகரின் ஆசனத்தில் நீர் ஊற்றியது, பொலிஸாரைத் தாக்கியது, கத்தி போன்ற பொருள்களைப் பயன்படுத்தியதும் கண்டறியப்பட்டுள்ளது.

மூன்று நாள் குழப்பங்களின்போது, 325,000 ரூபா சேதங்கள் ஏற்படுத்தப்பட்டன எனவும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது,

இந்த அறிக்கை சபாநாயகரின் ஆய்வுக்குப் பின்னர் மேல் நடவடிக்கைகள் எடுப்பதற்காக சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. (ஐ)

# மேலும் 3 ரோந்துப் படகுகளை இலங்கைக்கு வழங்கியது ஆஸி.



கொழும்பு, ஜன. 27

இலங்கைக் கடலோரக் காவல் படைக்கு ஆஸ்திரேலியா மேலும் மூன்று ரோந்துப் படகுகளை நேற்று முன் தினம் வழங்கியுள்ளது. ஸ்டபி கிராப்ட் வகையைச் சேர்ந்த இந்தப் படகுகளைக் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் கொழும்பில் உள்ள இலங்கைக் கடற்படையின் ரங்கல்ல தளத்தில் இடம்பெற்றது.

ஆஸ்திரேலிய தூதுவர் பிரைஸ் ஹட்சிசன், இந்த ரோந்துப் படகுகளை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர். ருவான் விஜேவர்த்தன, இலங்கைக் கடலோரக் காவல்படையின் பணிப்பாளர் றியர் அட்மிரல் சமந்த விமலதுங்க ஆகியோரிடம் முறைப்படி கையளித்தார்.

இந்த நிகழ்வில் கடற்படைத் தளபதி, உள்ளிட்ட படை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இலங்கைக் கடற்படைக்கு ஆஸ்திரேலியா கடந்த 2014ஆம் ஆண்டு 38 மீற்றர் நீளம் கொண்ட, பேரகத் தைச் சேர்ந்த இரண்டு ரோந்துப் படகுகளை வழங்கியிருந்தது.

தற்போது கடலோரக் காவல் படைக்கு வழங்கப்பட்டுள்ள, 3 படகுகளும் சிறிய வகையானவை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## தெற்கின் தந்திரோபாயம்

அரசியலுக்காகவும், தனது பௌத்த, சிங்கள மேலாதிக்கச் சிந்தனைப் போக்குக் காரணமாகவும் இனவாதமாக நடந்து கொள்ளும் தென்னிலங்கை அதிகாரப் பீடம், அதே அரசியலுக்காக தனக்குள் முட்டி மோதும். ஆனால், அதுவே தன் இனத்துக்கான அழுத்தம் அல்லது எதிரான நடவடிக்கை என்று வரும்போது ஒன்றுபட்டு ஐக்கியப்பட்டு பேரினவாதமாக பேரெழுச்சி பெற்று நிற்கும். அவ்வாறு தனது இனத்துக்கு எதிரான விவகாரங்கள் வரும்போது அதனை எதிர்கொள்வதற்கு – முகம் கொடுப்பதற்கு –அது கையாளும் தந்திரோபாயமும் கூட தனித்துவமானதாகத் தான் இருக்கும்.

தமிழரின் உரிமைகளுக்கான விடுதலைப் போராட்டம் ஆயுத வழிக்குத் திரும்பி, அது தமிழர் தேசம் என்று ஒரு நாடு உருவாவதற்கு வழி செய்யும் என்றாகியபோது, தமிழர் தேசம் மீதான தனது ஆக்கிரப்பைத் தான் இழக்கப் போகின்றோம் என்று கருதி, அதனை முறியடிக்க சிங்கள தேசம் ஒன்றுபட்டு நின்றது. மனித குலத்துக்கு எதிரான குற்றங்களையும், மனிதாபிமானச் சட்டங்களுக்கு எதிரான கொடூரங்களையும், அடிப்படை மனித உரிமை மீறல்களையும் வகை தொகையின்றிப் புரிந்து, தமிழர் தேசம் உருவாகுவதையும் அதன் எழுச்சியையும் அடியோடு நசுக்கியது சிங்களம். அப்படி நசுக்குவதில் ஒன்றுபட்டு நின்ற தென்னிலங்கை அத்தகைய குற்றங்களை மூடிமறைப்பதிலும் ஒரே குரலில் அணி திரண்டது. தனக்குள் என்ன அரசியல் வேறுபாடுகள் இருந்த போதும் பௌத்தத்துக்கு முன்னுரிமை, யுத்தக் குற்றங்களுக்கு நீதியான விசாரணை நடத்துவதற்கான சர்வதேசப் பொறிமுறையை நிராகரித்தல், பொறுப்புக் கூறலைத் தட்டிக் கழித்தல் போன்ற விவகாரங்களைத் தனது பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் ஏக நலனாகக் கருதி அந்த விசயத்தில் ஒன்றுபட்டு நின்றது; நிற்கின்றது. தென்னிலங்கையின் பேரினவாதக் கட்சிகள் எல்லாம் இதில் ஒன்றுபட்டு நின்றமையைக் கண்டோம்.

ஆட்சிப் பீடத்துக்கு வருவதற்காகவும், ஆட்சி அதிகாரத்தைத் தங்களிடம் தக்க வைப்பதற்காகவும் சிறுபான்மையினருடன் இணக்கம் கண்டு, அதனடிப்படையில் அமைக்கப்பட்ட நல்லாட்சி அரசு கூட, பொறுப்புக் கூறல் விடயத்தை இழுத்தடித்து கால ஓட்டத்தில் அதனை நீர்த்துப் போகச் செய்வதற்காக ஜெனீவாவில் ஐ.நா.மனித உரிமைகள் கவுனஸிலில் மேற்கொண்ட நடவடிக்கை கவனிக்கத்தக்கது.

இப்போது மீண்டும் மனித உரிமைகள் கவுன்ஸிலில் இன்னும் ஒரு மாதத்தில் கூடும்போது இலங்கைக்கு நெருக்குதல் வரப் போகின்றது. இலங்கையின் கழுத்தில் கயிறு இறுக்கும் என்றதும் அதனை முறியடிப்பதற்கு தென்னிலங்கை பௌத்த, சிங்கள அதிகாரபீடம் தனக்கேரியுரித்தான தந்திரத்தோடும் சாணக்கியத்தோடும் மீண்டும் ஒன்றுபட்டு தயாராகி நிற்கின்றது என்பதுதான் கவனிக்கத்தக்கது.

இலங்கை இராணுவத்துக்கு பல உயர்மட்ட – பெருமை சேர்த்த – இராணுவ அதிகாரிகளைத் தந்த பாடசாலை நாளந்தாக் கல்லூரி. அந்தக் கல்லூரியின் பழைய மாணவர் பாதுகாப்பு அமைச்சின் தற்போதைய செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ. அவரைப் பாராட்டும் வைபவம் ஒன்று கடந்த திங்களன்று கல்லூரியில் நடைபெற்றது.

யுத்தத்தின் வெற்றி வீரர்கள் எவரும் எந்த நீதிமன்றத்தின் முன்னாலும் நிறுத்தப்படவே மாட்டார்கள் என்று நாட்டின் ஜனாதிபதியிலிருந்து, பிரதமர், நீதி அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் முதல் தென்னிலங்கையின் சாதாரண அரசியல்வாதிகள் வரைக் கூறிக் கொண்டிருக்கையில் –

அதற்கு மாறாக நாட்டின் பாதுகாப்புச் செயலாளர் கருத்து ஒன்றை வெளிப்படுத்தினார்.

நாட்டின் புகழ்பூத்த உயர் இராணுவ அதிகாரிகளின் கல்விக் கோயிலாகவும், சிங்கள, பௌத்த பண்பாட்டின் ஊற்றுக் கண்ணாகவும் திகழும் நாளந்தாக் கல்லூரியில் போய் நின்று கொண்டு –

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட ஆயுதப் படையினருக்கு எதிராக உரிய நடவடிக்கை தாரதம்மியம் பார்க்காமல் எடுக்கப்படும் என்றும், கடந்த காலங்களில் கொடூரமாக நடந்து கொண்டமை மூலம் மனித உரிமையை மீறிய பதினொரு இராணுவத்தினருக்கு எதிராக அடுத்த இரண்டு வாரங்களுக்குள் நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் முழங்கியிருக்கின்றார்.

யுத்தம் நடந்த காலத்திலும் சரி, அதன் பின்னரும் சரி, மனித உரிமைமீறல்கள் தொடர்பில் தன்னுடைய படையினருக்கு எதிராக இவ்வாறு நடவடிக்கை எடுக்கப் போகின்றோம் என்று முதன் முதலில் மூத்த பாதுகாப்பு அதிகாரி ஒருவர் – அதுவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருக்கும் ஒருவர் – பகிரங்கமாக கருத்து வெளியிட்ட சம்பவம் இதுவாகும்.

அது அதிசயமல்ல. இத்தகைய அறிவிப்புக்கு எதிராக தென்னிலங்கை பௌத்த சிங்களமும், பேரினவாத அரசியல் தலைமைகளும் பெருத்த எடுப்பில் கொதித்து எழாமல் அடக்கு வாசிப்பது தான் அதிசயம். அதில்தான் தென்னிலங்கை அரசியல் தந்திரோபாயமும் சாணக்கியமும் பொதிந்துள்ளமையை நாம் அவதானிக்க வேண்டும்.

ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான கவுன்ஸில் அடுத்த மாதம் ஜெனீவாவில் கூடுகின்றது. மார்ச் மாத முற்பகுதியில் இலங்கை விடயம் மீளவும் அங்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றது.

யுத்த குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறும் விடயத்தில் சர்வதேச விசாரணைப் பொறிமுறை என்ற இக்கட்டிலும், நெருக்கடியிலும் இருந்த தப்புவதற்குப் பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டிய கட்டாயம் இலங்கைக்கு.

அத்தகைய விசாரணை நடவடிக்கையை உள்நாட்டுக்குள்ளே நடத்தக்கூடிய தகுதியும், தகைமையும், நேர்மைத்தன்மையும், சுயாதீன செயற்போக்கும் தனக்கு உள்ளது என்று படம் காட்ட வேண்டிய இலங்கை அதற்கான தந்திரோபாயத்தையே தனது பாதுகாப்புச் செயலர் மூலம் இவ்வாறு கட்டவிழ்க்கின்றது. அதனைப் புரிந்து கொண்டுள்ள தென்னிலங்கை பௌத்த, சிங்களப் பேரினவாத மேலாதிக்கம், அத்தகைய கருத்து வெளியிட்ட தனது பாதுகாப்புச் செயலரை விமர்ச்சிக்காமல் மௌனம் கடைப்பிடித்து அமுக்கி வாசிக்கிறது. இதுதான் இந்த விசித்திரப் பண்பியல்புக்குள் பொதிந்து கிடக்கும் அரசியல் சூத்திரம்...!

# மன்னார் மறைமாவட்டம்; 38 ஆவது ஆண்டுவிழா



மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 38 ஆண்டு விழாவும் மன்னார் வேதசாட்சிகளின் 475 ஆம் ஆண்டு யூபிலி ஆரம்பவிழாவும் நேற்று முன்தினம் சனிக்கிழமை இறை வழிபாட்டுடன் மன்னார் தோட்டவெளி வேதசாட்சிகளின் அன்னை ஆலயத்தில் விமரிசையாக கொண்டாடப்பட்டது.

இவ் விழாவினை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகையின் அழைப்பின் பேரில் திருமலை மறைமாவட்ட ஆயர் மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை தலைமையில் மன்னார் தோட்டவெளி வேதசாட்சிகளின் ஆலயத்தில் காலை 7.30 மணிக்கு கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதுடன் வேதசாட்சிகளின் 475ம் ஆண்டு யூபிலி மற்றும் மன்னார் மறைமாவட்ட உதயமாகி 38வது ஆண்டு நிறைவு சின்னம் மேதகு ஆயர் நோயல் இம்மானுவேல் ஆண்டகையால் திரை நீக்கம் செய்யப்பட்டது.

இவ் விழாவில் மன்னார் மறைமாவட்டத்திலுள்ள 46 பங்கு தளங்களிலிருந்தும் பெருந்தொகையான பக்தர்கள் அருட்பணியாளர்கள், அருட் சகோதரர்கள் அருட்சகோதரிகள், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், அரசு, அரசு சார்பற்ற நிறுவன அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இவ் விழாவின்போது மன்னார் மறைமாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பங்குத் தளங்களும் இவ்வாண்டு மேற்கொள்ள இருக்கும் மேய்ப்பு பணி திட்டங்களை பங்கு மேய்ப்புப் பணி சபை பிரதிநிதிகளால் ஆயர் முன்னிலையில் சமர்பிக்கப்பட்டு அதற்கான ஆசீரையும் பெற்ற நிகழ்வும் இடம்பெற்றது. (ஏ)

## சேனா படைப்புழுவின் தாக்கம்; வாராந்த அறிக்கைக்கு பணிப்பு

கொழும்பு,ஜன.27

சேனா படைப்புழுவின் தாக்கம் மற்றும் இழப்பீட்டு விவரங்கள் தொடர்பாக வாராந்த அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

கன்னொருவ பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் விவசாய அமைச்சர் பி.ஹரிஸன் இதனைக் கூறியுள்ளார்.

அத்தோடு, இழப்பீட்டுக்கான நிதியை காலதாமதமின்றி விடுவிக்குமாறு நிதியமைச்சுக்கு பிரதமர் அறிவுறுத்தியுள்ளார் எனவும் அமைச்சர் ஹரிஸன் குறிப்பிட்டுள்ளார். அதனடிப்படையில் சேத விவரங்கள் குறித்த மதிப்பீடுகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

விவசாயத்துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள சேனா படைப்புழுவினால், அதிகளவான விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. குறித்த புழு விரைவாக தொற்றிவருவதால், தாக்கத்திற்குள்ளான பயிர்ச்செய்கையை அழித்துவிடுமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குவதற்காக அரசாங்கம் 25 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

## சட்டவிரோதமாக தங்கியிருந்த 24 இந்திய பிரஜைகள் கைது!

கொழும்பு,ஜன.27

சட்டவிரோதமான முறையில் நாட்டில் தங்கியிருந்த இந்திய பிரஜைகள் 24 பேர் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.


இங்கிரிய பிரதேசத்தில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றிக் கொண்டிருந்த அவர்கள் கைது செய்யப்பட்டனர் எனக் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள விசாரணைப் பிரிவு அதிகாரி ஒருவர் கூறினார்.

அவர்கள் அனைவரும் சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்துள்ளதுடன், அவர்களின் விசா காலம் நிறைவடைந்திருந்ததாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் அதிகாரி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட குறித்த இந்தியர்கள் 24 பேரும் மிரிஹான தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட உள்ளனர்.

இது சம்பந்தமாக விசேட விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் அந்த அதிகாரி கூறினார். (ஏ)

## முல்லைத்தீவில் நேற்று மழை



முல்லைத்தீவு,ஜன.27

முல்லைத்தீவு மாவட்டத்தில் சில இடங்களில் நேற்றைய தினம் மழை பெய்துள்ளது. கடந்த மாதம் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன. இதனைத் தொடர்ந்து அந்த மாவட்டங்களில் கடும் வெப்பம் நிலவியதோடு பனிப் பொழிவும் கடுமையாகக் காணப்பட்டது

இந்நிலையில் நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தின் சில பகுதிகளில் காற்றுடன் கூடிய கடும் மழை பொழிந்துள்ளது. (ஏ)

## புனர்வாழ்வு பெற்ற தமிழ் விடுதலைப் புலிகள் கட்சி முல்லைத்தீவில் இன்று அலுவலகத்தை திறக்கிறது

முல்லைத்தீவு,ஜன.27

சமகாலத்தில் நிலவும் அரசியல் சூழ்நிலை மற்றும் எமது மண்ணுக்காக போராடிய போராளிகளின் நிலைப்பாடு அவர்களது வாழ்வாதாரம், ஜீவனோபாயம் போன்ற இன்னோரன்ன விடயங்களை கருத்தில் கொண்டும் எமது ஜனநாயக நீரோட்டத்திலான அரசியல் பயணத்தை தொடரும் நோக்குடன் இன்று (27/01/2019) முற்பகல் 10:30 மணியளவில் கட்சியின் உத்தியோகபூர்வ அலுவலகம் திறக்கப்படவுள்ளதாக புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சி தெரிவித்துள்ளது.

பொலிஸ் நிலைய வீதி ,1ம் வட்டாரம், வேணாவில், புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு என்ற முகவரியிலேயே அலுவலகம் திறக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய அலுவலக திறப்பு விழாவின் போது மக்கள், மாவீரர் குடும்பம் மற்றும் போராளி குடும்பம் உட்பட 50 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்குவதோடு பாடசாலை உபகரணங்களும் 40 பிள்ளைகளுக்கு வழங்கப்படவுள்ளன.

எனவே அன்பான மக்களே போராளிகளே நாம் நாட்டுக்காக போராடி சொல்லொணா துயரத்தில் பல வேதனைகளில் இருந்து எமது இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப வேண்டும்; எமது வாழ்வாதாரம் மேலோங்க வேண்டும்; ஆகையினால் இந்த திறப்பு விழாவுக்கு அனைவரையும் வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறோம் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஏ)

### நாளை

28.01.2019
திங்கட்கிழமை

நட்சத்திரம் : சுவாதி மு.இ 8.19 வரை
திதி : அட்டமி மு.இ 8.41 வரை
சுபநேரம் : 12.36 - 02.06 வரை
இராகுகாலம் : 8.06 - 9.36 வரை

# இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனத்தின் கீழ் முல்லை. ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை



முல்லைத்தீவு,ஜன.27

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் அமைந்துள்ள ஓட்டுத்தொழிற்சாலை போரின் பின்னர் இயங்காத நிலையில் உள்ளது.

பலதரப்பினர் முயற்சிகள் மேற் கொண்டும் பலனளிக்காத நிலையில் அந்த இடத்தை இலங்கை பீங்கான் கூட்டுத்தானத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனம் தனது பெயர் பலகையை அவ்விடத்தில் நட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இல்மனைட்களை அகழ்வது தொடர்பில் அண்மைக்காலத்தில் பல்வேறு சர்ச்சைகள் எழுந்தன. வடக்கு மாகாணசபை ஆட்சிக்காலத்தில் நாயாறு, செம்மலைப் பகுதிகளில் கனிய மணல்கள் படிந்துள்ளன இவற்றை எடுப்பதற்கு கனிப் பொருள் கூட்டுத்தாபனத்தினர் நடவடிக்கை எடுத்த நிலையில். இதில் தலையிட்ட வட மாகாண சபையினர் குழு ஒன்றை அமைத்து கடந்த 01.08.18 அன்று புல் மோட்டை பகுதிக்கு சென்று இரண்டாம் கட்ட ஆய்வுகளை மேற்கொண்டனர்.

இதில் நாயாறு, செம்மலைப்பகுதி களில் எடுக்கப்படும் கனிய மணல்களை ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை பகுதியில் தொழிற்சாலை அமைத்து செயற் பட்டால் மக்களுக்கு பயன் உள்ளதாக இருக்கும் என்று அன்று முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் க.சிவனேசனால் பரிந்துரைக்கப்பட்டது.

அதேவேளை இல்மனைட்டை மூலப்பொருளாக கொண்டு ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையை அண்டிய பிரதேசத்தில் கனிப்பொருள் கூட்டுத்தாபனம் ஒன்றை அமைத்து செயற்பட மாவட்டத்தில் உள்ளவர்கள் விருப்பம் தெரிவித்தால் அதனை நடைமுறைப் படுத்த தயாராக இருப்பதாகவும் கனிய மணல் கூட்டுத்தாபனம் சார்பான அதிகாரிகள் அன்று தெரிவித்துள்ளார்கள்.

அதன்பின்னர் வடமாகாண சபையினால் அமைக்கப்பட்ட குழுவின் முடிவு தொடர்பில் எதுவித செய்திகளும் வெளியாகாத நிலையில் தற்போது ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையில் இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனம் என பெயர்ப் பலகை நட்டு வைக்கப்பட்டுள்ளது. (ஏ)

## தடம்புரண்டது லொறி



நுவரெலியா,ஜன.27

திஸ்ஸமஹாராம பகுதியிலிருந்து அக்கரபத்தனை பகுதிக்கு கால்நடைக்கான தீவனங்களை ஏற்றிச்சென்ற லொறி தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

நுவரெலியா – தலவாக்கலை பிரதான வீதியில் ரதல்ல குறுக்கு பாதையில் இந்த லொறி வீதியை விட்டு விலகி குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று காலை 6 மணியளவில் இவ் விபத்து நேர்ந்துள்ளதாக நானுஓயா போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர். லொறியில் ஏற்பட்ட இயந்திர கோளாறே விபத்துக்குக் காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

லொறியில் சாரதியும், உதவியாளரும் பயணித்துள்ளனர் எனவும், சாரதி சிறு காயங்களுடன் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளபோதும், அவர் படுங்காயப்பட்டு நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த லொறியில் இருந்த கால்நடை தீனிகளை பிரதேச மக்களின் உதவியுடன் மற்றுமொரு லொறிக்கு ஏற்றிச்செல்ல நடவடிக்கை மேற்கொண்டனர்.

சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஏ)

## படைப்புழு தாக்கம் தொடர்பில் யாழில் அறிவூட்டல் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜன.27

இலங்கையில் சோளப் பயிர்ச் செய்கையில் தீவிரமாகப் பரவி வரும் படைப்புழுவானது இவ் வருடத்தில் முதன் முதலாக இலங்கையில் அறியப்பட்ட அந்நிய ஆக்கிரமிப்பு பீடை ஒன்றாகும். இப்பீடைக்கு சோள பயிரில் மாத்திரமன்றி கரும்பு, நெல், மரக்கறி வகைகள், பழப்பயிர்கள் மற்றும் அவரைப்பயிர்கள் உட்பட 100 இற்கும் மேற்பட்ட பயிர் வகைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஆற்றல் காணப்படுகின்றது என்பது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

முதன் முதலாக அம்பாறை மாவட்டத்தில் இப்படைப்புழுவின் தாக்கம் அவதானிக்கப்பட்டது. மிகக் குறுகிய காலத்தினுள் மொனறாகலை, அனுராதபுரம், பொலனறுவை, குருநாகல் போன்ற மாவட்டங்களுக்கும் இப்பீடையின் தாக்கம் பரவியுள்ளது. இந்த அந்நிய ஆக்கிரமிப்பு பீடையின் தாக்கமானது நாடு முழுவதும் பரவிச்செல்வதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றது.

தற்போது சிறிய அளவில் வட மாகாணத்திலும் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பாக மக்களை அறிவூட்டுவதன் மூலம் பீடையின் தாக்கத்தினை கட்டுப் படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நாடு முழுவதும் தீவிரமாக பரவிச்செல்வதனை தவிர்த்துக்கொள்வதற்குமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமாக 29.01.2019ம் திகதி (செவ்வாய்க் கிழமை) காலை 9 மணிக்கு யாழ்ப் பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் வட மாகாண பிரதம செயலாளர் தலைமையில் நடைபெறவுள்ள மாகாண மற்றும் மாவட்ட மட்ட அலுவலர்களுக்கு அறிவூட்டும் செயலமர்வு நடைபெறவுள்ளது என வடக்கு மாகாண விவசாய அமைச்சின் உதவி திட்டமிடல் பணிப்பாளர் க.தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார். (ஏ)

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம்,ஜன.26

யாழ் மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இ. விஜயராசா தலைமையில் நடைபெற்றதோடு அங்கு 2019 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக இ.விஜயராசா, செயலாளராக ச.தியாகராசா, பொருளாளராக சி.நாகேஸ்வரன், உபதலைவராக எ.இ.போல்ஜெயகாந்தன், உப செயலாளராக பா.நஞ்சித்குமார் ஆகியோரும்

தே.நிக்கொலஸ்ஜோண்சன், செ.கஜந்தன், செ.ராஜேந்திரராஜா, த.வசந்தன், பொ.செல்வநாயகம், து.யோகராசா ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகவும் தெரிவாகினர். (இ - 19)

## வறிய குடும்பத்தவர்கள் 130 பேருக்கு இலவச கண் சத்திர சிகிச்சை



மட்டக்களப்பு,ஜன.27

லண்டன் வாழ் மட்டக்களப்பு வைத்தியசாலை நண்பர்கள் அமைப்பினால், வறிய குடும்பங்களைச் சேர்ந்த 130 பேருக்கு இலவச கண் சத்திர சிகிச்சைகள் நேற்று முன்தினம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டன.

கண் பார்வை தொடர்பாக பல்வேறு குறைபாடுகளுடன் அதற்கான சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான போதுமான நிதி வசதிகளின்றி இருந்த 130 பேருக்கு லண்டன் வாழ் மட்டக்களப்பு வைத்தியசாலை நண்பர்களின் அமைப்பின் ஊடாக இவ் இலவச சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

துறை சார்ந்த புலம்பெயர் தமிழ் வைத்திய நிபுணர்களும், மட். போதனா வைத்தியசாலையின் கண் வைத்திய நிபுணர்களும் இணைந்து மேற்படி சத்திர சிகிச்சைகளை வெற்றிகரமாக மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

## மன்னாரில் வெண்பா பனி



மன்னார்,ஜன.27

மன்னார் பெருநிலப்பரப்பில் என்றும் இல்லாதவாறு வெண்பா பனி என அழைக்கப்படும் பனி படலம் கடந்த இரு நாட்களாக (24,25.01.2019) இருந்தமையால் காலையில் தொழில் மற்றும் அலுவலகம், பாடசாலைகளுக்கு சென்ற மாணவர்கள் பெரும் சிரமத்தை எதிர் நோக்கினர் எனத் தெரி வித்தனர்.

இந்த பனிப்படலம் காலை 10 மணிவரை இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (112)

## பலாலி விமான நிலையத்தை பார்வையிட்டனர் மாணவர்கள்

யாழ். பாதுகாப்புப் படைக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் தர்ன ஹெகட்டியாராச்சியிடம் யாழ்;உயரப்புலம் வித்தியாலயம், யாழ் வட்டு இந்து வித்தியாலய, ஆசிரியர்கள் முன் வைத்த கோரிக்கைக்கு அமைவாக, ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் உட்பட 130 பேர் பலாலி விமான நிலையத்தை நேற்றுமுன்தினம் பார்வையிட்டனர்.

இச்சந்தர்ப்பத்தில் வருகை தந்திருந்த அனைவருக்கும் இராணுவத்தினரால் தேநீர் உபசாரம் வழங்கப்பட்டது. (ஏ)



### மாணவனின் திறமைகளைக் கண்டறிந்து

# ஆசிரியர் பயிற்றுவிப்பாளராக செயற்பட வேண்டும்

பண்டைக்காலம் தொட்டு ஆசிரியம் என்ற எண்ணக்கரு பல்வேறு மாற்றங்களினூடாக பரிணமித்து வந்துள்ளது. தற்போது பல்வேறு பயணப் பாதைகளூடாக உருமாறி பல்வேறு சிந்தனையாளர்களினால் கருத்தேற்றம் பெற்று இன்று ஆசிரியர் மாணவனின் கற்றலுக்கு வசதி செய்து கொடுப்பவர் என்ற வகிப்பாகத்தை ஏற்றுள்ளார். எது எப்படி இருப்பினும் ஆசிரியர் ஒருவரின் பங்களிப்பு மாணவனின் பல பரிமாண உருவாக்கத்திற்கு இன்றியமையாதது என்பது வெளிப்படை உண்மை. இக்கட்டுரை ஒரு மாணவனை உருவாக்குவதற்கு ஆசிரிய வகிபாகம் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதை நான்கு தலைப்புகளில் கோடிட்டுக் காட்ட முயல்கின்றது.

**நபர்களை தேடிக் கண்டறிபவர்**

மாணவன் சமூகத்தில் இருந்து பாடசாலைக்கு நுழைகின்றான். அவனது பிறப்பு, சூழல், பின்புலம் என்பவற்றின் செல்வாக்கினால் அவனது ஆளுமை உருவாகின்றது. பாடசாலை அதனைச் செழுமைப்படுத்த முயல்கின்றது. ஒரு மாணவனுக்கு உள்ளார்ந்த ரீதியில் எவ்வளவோ ஆற்றல் உடைமைகள் இருக்கக்கூடும் அவரது உள்ளார்ந்த ஆற்றல் எது அல்லது எவை என்பதை துல்லியமாக அறிந்து கொள்ளும் பொறுப்பு ஆசிரியரைச் சார்ந்தது. ஒரு மாணவன் எப்படிப்பட்டவன் அவனது இயல்பு யாது? இவனுக்கு எப்படிக் கற்பிக்கலாம்? எவ்வாறு வழிகாட்டலாம்? என்பதை எல்லாம் சரியாக அறிந்தால் மட்டுமே அவனுக்கு சரியான வழிகாட்டி நெறிப்படுத்த முடியும். அந்த வகை நபர்களைத் தேடிக் கண்டறிபவராக ஆசிரியர் தொழிற்பட வேண்டும்.

**பயிற்றுவிப்பாளர்**

மாணவர்கள் வெவ்வேறு உள்ளார்ந்த திறன்களைக் கொண்டிருப்பார்கள் என்று முன்னர் அறிந்தோம். அந்தத் திறன்களை தேடி அறியும் ஆற்றல் கொண்டவராக ஆசிரியர் இருக்க வேண்டும் என்பதையும் அறிந்தோம். அந்தத் திறன்களை வளர்ப்பதற்கான பயிற்றுவிப்பாளர் யார்? அவரும் ஆசிரியரே. உதாரணமாக ஒரு மாணவனிடம் பேச்சாற்றல் உள்ளதாக அறிந்து கொண்டால் அவனது பேச்சுத் திறமையை வளர்த்தெடுக்கும் பொறுப்பு ஆசிரியரைச் சார்ந்ததே. ஒருவேளை அவருக்கு அந்தத் திறன் இல்லாதிருப்பின் பொருத்தமான நபரைக் கண்டுபிடித்து அவரிடம் அம்மாணவனை திசைமுகப்படுத்தல் வேண்டும். இவ்வாறு மாணவனின் திறமையைக் கண்டறிந்து பயிற்றுவிப்பாளராக ஆசிரியர் தொழிற்பட வேண்டியவராக உள்ளார்.

**குழுத்தலைவர்**

இன்று நாம் எல்லோரிடமும் எதிர்பார்ப்பது தலைமைத்துவப் பண்பு. எந்த ஒரு நிகழ்வின் வெற்றிக்குக் காரணம் சரியாக திட்டமிட்டு ஒழுங்கமைத்து வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தி நிறைவு காணுதலே இத்தலைமைத்துவப் பண்பாகும். இதனை மாணவரிடையே வளர்ப்பவரும். ஆசிரியரே. முதலில் சிறந்த தலைவராக ஆசிரியர் செயற்பட வேண்டும். அதன் பின்பே மாணவனது தலைமைத்துவ பண்பை வளர்த்தெடுக்க முடியும். பல்வேறு செயற்பாடுகளிலும் மாணவனை ஈடுபடுத்தி அவனுக்கு ஊக்கம் கொடுத்து தலைமை தாங்கும் ஆற்றலை அவனுக்கு வழங்க வேண்டிய கடப்பாடும் ஆசிரியரைச் சார்ந்தது.

**போதனா வடிவமைப்பாளர்**

மேற்கூறிய மூன்று செயற்பாடுகளையும் திறம்பட ஆசிரியர் நிறைவேற்றினால் போதுமா? அவனை சிறந்த கல்வி அறிவுள்ளோனாக்குவது யார்? அதுவும் ஆசிரியரைச் சார்ந்ததே. மாணவர்களுக்குத் தேவையான கல்வியை பொருத்தமான வகையில் திட்டமிட்டு சிறந்த வழிமுறைகளினூடாக வழங்க வேண்டும். அதற்கான பயிற்சிகளைப் பெற்று சரியான முறையில் போதனா வடிவமைப்பைச் செய்து வெற்றிகரமாக தனது செயற்பாட்டை ஆசிரியர் செய்ய வேண்டும்.




**நிறைவுரை**

ஒவ்வொரு மாணவனும்தன் வாழ் நாளில் மறக்க முடியாத சக்தியாக ஒவ்வொரு ஆசிரியரும் திகழ்கின்றார். ஆசிரியப் பணி மகத்துவம் வாய்ந்தது. வெறுமனே ஊதியத்திற்காக வேலை செய்யும்தொழில் அல்ல. இது ஓர் அறிவார்ந்த நற்பண்பான சமுதாயத்தை உருவாக்கும் அரிய பணி. இப்பணியை முழுமையாகச்செய்ய முடியாவிட்டாலும் முழுமையாகச் செய்ய முயலுதலும் இன்றைய எதிர்கால உலகுக்குத் தேவையான செயற்பாடாக உள்ளது.

**க. பாலகுமார்**
யாழ். மத்திய கல்லூரி
யாழ்ப்பாணம்

# இருமொழிக் கல்வியின் தற்போதைய நிலையும் அதற்கான அவசியமும்

எமது நாடான இலங்கை ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைப் பேசும் மக்களை தன்னகத்தே கொண்டது. ஆரம்பகாலத்தில் நவீன போக்குவரத்து வசதிகள் மிகவும் குறைந்த காலப்பகுதியில் புவியியல் ரீதியாக இடைவிலகிக் காணப்பட்ட தமிழ், சிங்கள மொழி பேசும் மக்களுக்கிடையிலோ ஆட்சியாளர்களுக்கிடையிலோ பெரும் முரண்பாடுகள் ஏற்படவில்லை. மேலும் தமிழ் சிங்கள மன்னர்கள் நட்புறவு பாராட்டியமைக்கான சான்றுகளும் வரலாற்று நூல்களில் அடிக்கோடிட்டுக் காட்டப்படுகின்றன.

பின்னர் அந்நியரின் ஆட்சிக்குட்பட்ட இலங்கை அவர்களின் சுதேசமொழிகளின் தாக்கத்திற்கு உட்பட்டமை தவிர்க்க முடியாதாகியது. இந்நிலையில் 1796களில் இலங்கை வந்த பிரித்தானியர்கள் இலங்கைக்கு ஆங்கில மொழியை அறிமுகம் செய்தனர். இவர்களின் ஆட்சிக்காலத்தில் ஆங்கில மொழிப் புலமை பெற்றவர்களுக்குக் கிடைத்த சமூக, பொருளாதார, அரசியல் ரீதியான அதிகாரங்கள் ஆங்கில மொழி இலங்கையில் செழிப்புற்று வளர்ந்தமைக்குக் காரணமாயிற்று.

ஆயினும் இதே காலப்பகுதியில் தாய்மொழிக் கல்வி பெற்றவர்கள் எதிர்கொண்ட சமூக, பொருளாதார, அரசியல் நலிவுத் தன்மையினால் ஆங்கிலக்கல்வி நலிவடைந்தது. இதனால் இலங்கையர்கள் உலகளாவிய ரீதியில் புகழ்பூத்த வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் வாய்ப்புக்களை இழந்ததோடு சர்வதேச ரீதியான தொழில்சந்தையிலும் வரவேற்பைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை தோன்றியது. இச் சரிவினை உணர்ந்து கொண்ட அரசு 1990களில் மீண்டும் ஆங்கில மொழிமூலக் கல்வியை அறிமுகப்படுத்திய போதும் போதிய அல்லது பொருத்தமான திட்டமிடல் இன்மையால் அது தோல்வியடைந்தது.

ஆயினும் புதிய மிலேனியம் ஆண்டில் ஏற்பட்ட பூகோளமயமாதல் மற்றும் பெரும் பொருளாதார மாற்றங்கள் மிக விரைவிலேயே உலகை ஒரு கிராமமயமாக்கியமையாலும் 1977களிலேயே அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கைகளினால் நாட்டிலே ஏற்படுத்தப்பட்ட பெரும் வெளிநாட்டு முதலீடுகளின் விளைவாகத் தோன்றிய புதிய வேலை வாய்ப்புக்களினாலும் 2000ஆம் ஆண்டில் மீண்டும் ஆங்கிலமொழிக்கல்வி உருவாக்கப்பட்டது.

இதனடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழு உயர்தர விஞ்ஞானப்பிரிவு, தரம் 06 இலிருந்து 11 வரை சில பாடங்கள் மற்றும் சில பாடசாலைகளில் தரம் 01 முதல் ஆங்கில மொழி மூலக் கல்வியை ஆரம்பிக்க அனுமதியளித்தது. பல நகரப் பாடசாலைகள் ஆர்வத்துடன் ஆங்கில மொழிக்கல்வியை ஆரம்பித்த போதும் பொருத்தமான, தரமான ஆசிரியர் வளப் பற்றாக்குறை, போதிய நூல்வசதிகளின்மையால் பல மாணவர்கள் பாதிக்கப்பட்டமை மறுக்க முடியாதது.

இதனை அவதானித்த அரசு உடனடியாகவே பொருத்தமான புதிய ஆசிரியர் குழாம் மற்றும் ஏற்கனவே பதவியில் இருந்த ஆசிரியர்களுக்கு ஆசிரியர் மத்திய வள நிலையங்களினூடாக வாண்மைத்துவப் பயிற்சி மற்றும் நூல் வெளியீடுகளை பொருத்தமான வகையில் காலத்திற்குக் காலம் தொடர்ந்து செய்து வந்தது.

2002 இல் இடைநிலைக் கல்வியை அறிமுகப்படுத்திய போது 138 பாடசாலைகள் முன்வந்து இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தியதோடு அடுத்த வருடமே இது 297 ஆக அதிகரித்தது. ஆயினும் தொடர்ந்தும் அனைத்து பாடங்களையும் ஆங்கில மொழி மூலமாகக் கற்பிப்பதில் வெளிக்காட்டப்பட்ட எதிர்ப்புக்கள் வலுவடைந்து இன்று சட்டரீதியாகவே வரலாற்றுப் பாடம் சுய மொழியில் மாத்திரமே கற்பிக்கப்பட வேண்டும் என்ற சட்டமூலமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆயினும் விஞ்ஞான பாடத்தைப் பொறுத்தவரை ஆங்கில மொழி மூலக் கல்வி மீத்திறன் கூடிய மாணவர்களுக்காக எதிர்கால வாய்ப்புக்களை விரிவடையச் செய்யும் என்பதில் ஆரம்ப காலம் முதலே எதுவித மாற்றுக் கருத்துக்களும் காணப்படவில்லை.

ஆங்கிலமொழிக் கல்வி மூலம் மாணவர்கள் ஒரே நேரத்தில் பாடப்புலமையையும், மொழிப்புலமையையும் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் பெரும்பாலன விஞ்ஞான ஆராய்ச்சியின் கட்டுரைகள் ஆங்கில மொழிமூலமாகவே கிடைக்கப் பெறுகின்றமையால் ஆசிரியர்களும், மாணவர்களும் அறிவை இலகுவாக இற்றைப்படுத்திக் கொள்ள ஆங்கில மொழி மூலம் கைகொடுக்கும். மேலும் தற்போது இலங்கைப் பல்கலைக்கழகங்களினதும் ஏனைய சர்வதேச பல்கலைக்கழகங்களினதும் பல கற்கை நெறிகள் ஆங்கில மொழி மூலமாகவே காணப்படுகின்றன. எனவே பாடசாலைக் கல்வியை ஆங்கில மொழி மூலம் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் உயர்கல்வி வாய்ப்புக்களை இலகுவாகப் பெற முடியும். மேலும் தொழில் சந்தையிலும் இவர்களுக்கான கேள்வி அதிகமாகவே காணப்படுகின்றது. இவற்றை விடவும் பல மொழி, பல இன மாணவர்கள் ஒரே வகுப்பறையில் இருந்து கல்வி அனுபவத்தை பெறும் வாய்ப்பை உருவாக்குவதால் நல்லுறவும், நட்புறவும் மிக்க புரிந்துணர்வுடன் கூடிய நாளைய சமூகத்தை உருவாக்கும் வாய்ப்பை வழங்குகிறது இவ் ஆங்கில மொழிக்கல்வி.

எனினும் இத்தகைய எதிர்பார்ப்புகளை ஈட்டுவதற்கு பொருத்தமான மாணவர் தெரிவு, வளம் மிக்க ஆசிரியர் குழாமின் அர்ப்பணிப்பான சேவை, தரமான நூல் வெளியீடுகள் அவசியமாகும். புத்தகங்களில் காணப்படும் மொழிபெயர்ப்புக் குறைபாடுகள் முழுமையாக நிவர்த்தி செய்யப்படுவதோடு தாய் மொழிப் புலமை, சமய விழுமியங்கள் மற்றும் நாட்டுப்பற்று சற்றும் குறைவடையாது விழிப்புடன் கற்பிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

இதனடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழு 2014 இல் மேற்கொண்ட ஆய்வுகளின் படி பாடசாலைத் தரிசிப்பின் போது ஆங்கில மொழி மூலக் கல்வி பயிலும் மாணவர்களிடத்தில் குறைபாடுகளை அவதானித்திருக்கிறார்கள். அதாவது ஆங்கில மொழி மூல மாணவர்கள் தங்களது பரீட்சைப் புள்ளிகளில் சிறப்பான அடைவுகளைக் காட்டுகின்ற போதிலும் வாய்மொழி மூல ஆங்கிலப் புலமை என்பது மிகவும் கீழ் மட்டத்திலேயே காணப்படுகின்றது.

எனவே மொழி விருத்தி இரு மொழிக் கல்வியினூடாக முழுமையாக வளர்க்கப்படவில்லை. இதனை நிவர்த்தி செய்ய வகுப்பறைக் கற்பித்தல் நுட்பங்களிலும், மதிப்பீட்டு முறைகளிலும் மாற்றங்களைக் கொண்டு வருதல் அவசியமாகும். அதாவது வகுப்பறைக் கற்பித்தலில் தொடர்பாடல் திறனை அதிகரிக்க உதவும் குழுக் கலந்துரையாடல், முன்வைப்பு போன்ற யுக்திகளையும் மதிப்பீட்டு முறைகளில் வாய்மொழி மூலப் பரீட்சைகளையும் உள்ளடக்குவதன் மூலம் மாணவர்களின் தொடர்பாடல் புலமையை விருத்தி செய்ய முடியும்.

மேலும் இரு மொழி மூல ஆசிரியர்கள் வகுப்பறைக் கற்பித்தலின் போது சுயமொழி உபயோகித்தல், போதிய விடய விளக்கத்தை எளிய மொழிநடையில் வழங்காமை போன்ற குறைபாடுகளும் அவதானிக்கப்பட்டுள்ளன. எனவே இக் குறைப்பாடுகள் பாடசாலை மட்ட ஆசிரியர் மத்திய நிலையங்களினூடாக நடைமுறைப்படுத்தப்படும் செயற்றிட்டங்களினூடாக நிவர்த்தி செய்யப்படவேண்டும்.

மேலும் சில வகுப்பறைகள் இருமொழி மற்றும் சுயமொழி கல்வி மாணவர்கள் ஒருங்கே ஒரே நேரத்தில் வைத்துக் கற்பிக்கப்படுவதால் எண்ணிக்கையில் அதிகமுள்ள குழுவின் ஆதிக்கம் மற்றைய மாணவர்களின் செயற்பாட்டைப் பாதிப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறே ஆங்கிலத்தைப் பாடமாகக் கற்பிக்கும் ஆசிரியர்களும், ஆங்கில மொழி மூலமாகக் கற்பிக்கும் ஆசிரியர்களும் திட்டமிடுதலின் போது இணைந்து செயற்படுவதும் அவசியம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறே பொதுவாக கிராமப்புறப் பாடசாலைகளில் மொழிக்கற்கைக்கான ஊக்குவிப்பு பாடசாலையிலோ அல்லது வீட்டிலோ வழங்கப்படாமையும் இதனால் இவ் இருமொழிக் கல்வி வீழ்ச்சியடைந்துள்ளமையையும் அவதானிக்க முடிகிறது.

மாறிவரும் உலகினிற்கீடாக இலங்கைப் பிரஜைகள் எனும் அடையாளத்தோடு சர்வதேசத்தில் பல புலமையாளர்களை முன்னிறுத்த இருமொழிக் கல்வியில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து பொருத்தமான மாணவர்களை உள்வாங்கி பலம் மிக்க இலங்கையைக் கட்டியெழுப்ப பணி செய்ய வேண்டியது அனைவரதும் கடமையாகும்.

**திருமதி. றஜின்தா நேசரூபன்**
(ஆங்கில மொழி மூல விஞ்ஞான ஆசிரியர்)
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.






இந்தியாவின் 70ஆவது குடியரசு தினமான நேற்று டில்லி ராஜபாதையில் தேசியக்கொடியை ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் ஏற்றி வைத்து மரியாதை செலுத்துகின்றமையும் போர் வீரர்கள் நினைவிடத்தில் பிரதமர் நரேந்திர மோடி அஞ்சலி செலுத்துகின்றமையையும், முப்படைகளின் அணி வகுப்பையும் காணலாம்.









# சட்டவிரோத பண புழக்கத்தை தடுக்க தேர்தல் ஆணையம் கடும் நடவடிக்கை

புதுடில்லி,ஜன.27

வர இருக்கும் நாடாளுமன்ற தேர்தலில் சட்டவிரோத பண புழக்கத்தை தடுக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் எடுத்துள்ளது.

நாடாளுமன்ற தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ளன. இந்த நிலையில் நாடாளுமன்ற தேர்தலில் சட்டவிரோத பணம், மது மற்றும் விலையுயர்ந்த பொருள்கள் ஆகியவற்றை வேட்பாளர்கள் வழங்குவதை தடுக்க தேர்தல் ஆணையம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து உள்ளது.



தேர்தல் ஆணையம் இந்த சட்ட விரோத பணப்பட்டுவாடா தொடர்பாக மத்திய அரசின் நேரடி வரி வசூல் வாரியம் (சி.பி.டி.டி), அமலாக்கத் துறை (எ.கா.), கலால் துறை, வருமானவரித்துறை மற்றும் பொலிஸ் உள்ளிட்ட பல்வேறு ஏஜென்சிகளுடன் தொடர்ச்சியான கலந்துரையாடலை நடத்த தொடங்கியுள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

சட்டவிரோத பணத்தையும், மற்ற சட்டவிரோதமானவற்றையும் தேர்தல்களில் கொண்டுவரும் பெரிய அமைப்புகளை கண்காணிப்பது மற்றும் அதனைத் தடுக்கும் வழிமுறைகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

# பத்மஸ்ரீவிருதை ஏற்க மறுத்தார் பிரபல எழுத்தாளர் கீதா மேத்தா

புதுடில்லி,ஜன.27



மத்திய அரசு வழங்கிய பத்மஸ்ரீவிருதை ஏற்க ஒடிசா மாநில முதல்வரின் சகோதரியும், பிரபல எழுத்தாளரும், இயக்குநருமான கீதா மேத்தா மறுத்துவிட்டார்.

விரைவில் மக்களவைத் தேர்தல் வரும் நிலையில் இந்த விருதை நான் ஏற்றுக்கொண்டால், பல்வேறு தவறான யூகங்களுக்கு வழிவகுக்கும் என்பதால், தான் இந்த விருதை ஏற்க இயலாது எனத் தெரிவித்துள்ளார்.

கீதா மேத்தா தற்போது அமெரிக்காவைச் சேர்ந்த புத்தகப் பதிப்பாளர் சோனி மேத்தாவை திருமணம் செய்து அங்கேயே வாழ்ந்து வருகிறார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருந்துள்ளதாவது:

"பத்மஸ்ரீவிருதுக்கு நான் தகுதியானவர் என்று கருதி எனக்கு இந்திய அரசு விருது அறிவித்ததை நான் பெருமையாக, கவுரவமாகக் கருதுகிறேன். ஆனால், சில மாதங்களில் மக்களவைத் தேர்தல் வரும் நிலையில், நான் இந்த விருதை கண்டிப்பாக ஏற்க இயலாது. அதற்காக நான் வருந்துகிறேன். அவ்வாறு இந்த விருதை நான் ஏற்றால், பல்வேறு தவறான யூகங்களுக்கு வழிவகுத்துவிடும், எனக்கும், ஒடிசா அரசுக்கும் பெரும் தர்மசங்கடத்தை ஏற்படுத்தும். விருதை ஏற்க இயலாமைக்கு வருந்துகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

# பிரணாப் முகர்ஜிக்கு பாரத ரத்னா விருது



முன்னாள் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜிக்கு பாரத ரத்னா விருதை இந்நாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அறிவித்துள்ளார்.

வெளியுறவுத்துறை அமைச்சர், நிதியமைச்சர், பாதுகாப்பு அமைச்சர், லோக்சபா முன்னவர், திட்டக்கமிஷன் துணைத்தலைவர் போன்ற பல பதவிகளை பெற்று புகழின் உச்சத்தில் இருந்த பிரணாப் முகர்ஜி. கடந்த 2012ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரை இந்திய குடியரசு தலைவராகவும் இருந்தார்.

அனைத்துக் கட்சிகளிலும் நண்பர்களை பெற்றுள்ள பிரணாப் முகர்ஜி நேரு குடும்பத்தின் நம்பிக்கைக்கு உரியவராக இருந்தார். இந்த நிலையில் நாட்டிற்காக அவர் செய்த சேவையை பாராட்டி அவருக்கு இந்தியாவின் மிகப்பெரிய விருதான பாரத ரத்னா விருதை குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் அறிவித்துள்ளார்.

# உத்தரபிரதேசத்தில் காங்கிரஸ் ஆட்சி; பிரியங்காவின் இலக்கு குறித்து ராகுல்

*உத்தர பிரதேசத்தில் ஆட்சியை பிடிப்பதே பிரியங்காவின் இலக்கு என காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கூறியுள்ளார்.*

*இது தொடர்பில் ராகுல்காந்தி கூறியவை வருமாறு -*

*பிரியங்காவுக்கு ஓர் இலக்கு கொடுத்திருக்கிறேன். அடுத்து இங்கு நடைபெற இருக்கும் சட்டமன்ற தேர்தலில் பா.ஜனதாவை தோற்கடித்து, உத்தரபிரதேசத்தில் காங்கிரஸ் ஆட்சியை ஏற்படுத்துவதுதான் அது. குஜராத்தோ, உத்தரபிரதேசமோ,*



*தமிழ்நாடோ அனைத்து இடங்களிலும் காங்கிரஸ் முழுசக்தியுடன் முன்னணியில் இருந்து போராடும். நாடாளுமன்ற தேர்தலுக்கு பிறகு இந்த மாநிலங்களில் காங்கிரஸ் அரசை நீங்கள் பார்ப்பீர்கள்.*

*நாடாளுமன்ற தேர்தலிலும் காங்கிரஸ் எந்த பின்னடைவும் இன்றி முழுசக்தியுடன் போட்டியிடும். - என்றார்.*

# ஸ்ரீநகரில் 2 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை

காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகர் அருகே பதுங்கி இருந்த பயங்கரவாதிகள் 2 பேரை பாதுகாப்பு படை வீரர்கள் சுட்டுக் கொன்றனர்.

காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகர் அருகே உள்ள சோன்மாக் பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கி இருக்கின்றனர் என உளவுத் துறைக்கு தகவல் கிடைத்தது. அதை த் தொடர்ந்து பாதுகாப்பு படையினர் அந்த பகுதியை சுற்றி வளைத்தனர். பாதுகாப்பு படை வீரர்களை பார்த்ததும் பயங்கரவாதிகள் துப்பாக்கியால் சரமாரியாக சுட்டனர். பாதுகாப்பு படையினரும் பதில் தாக்குதலில் ஈடுபட்டனர். இரு தரப்பினர் இடையே பயங்கர துப்பாக்கி சண்டை நடந்தது.

இதில் 2 பயங்கரவாதிகளை பாதுகாப்பு படையினர் சுட்டுக் கொன்றனர். இந்த என்கவுண்டரில் பாதுகாப்பு படைதரப்பில் 3 வீரர்கள் காயம் அடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

## பனாமா உலக இளையோர் நாள் மாநாட்டில் இந்திய இளையோர் 56 பேர்

பனாமா நாட்டில் நடைபெறும் 34வது உலக இளையோர் நாள் நிகழ்வுகளில் கலந்துகொள்ள இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து 56 திருப்பயணிகள் பனாமா நகரை அடைந்துள்ளனர். இக்குழுவினர் சந்தியாகு மறைமாவட்டத்தின் அத்தலாயா பங்கில் தங்கி அங்கு நடைபெற்ற பல்வேறு ஆன்மீக மற்றும் கலாசார நிகழ்வுகளில் பங்கேற்பர்.

காலைக்கதிர்
Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## 34ஆவது உலக இளையோர் நாள் பனாமாவில்

திருஅவைக்குத் தேவையான மாற்றமும் மறுமலர்ச்சியும் இளையோராகிய உங்கள் கரங்களில் உள்ளன. உங்களை நாங்கள் நம்புகிறோம் என – நான் ஆண்டவரின் அடிமை; உம்சொற்படியே எனக்கு நிகழட்டும் – என்ற விருதுவாக்குடன் பனாமாவில் துவங்கிய 34வது உலக இளையோர் நாள் நிகழ்வுகளின் துவக்கத் திருப்பலியை நடத்திய பேராயர் தன் மறையுரையில் வலியுறுத்தினார்.

### யாழ் மறைமாவட்டத்தில் பணியாற்றி

# குருத்துவ பொன்விழா காணும் நாயகர்களை வாழ்த்துவோம்



யாழ் மறைமாவட்டத்தில் 50 ஆண்டுகள் (1968 - 2018) குருத்துவப் பணியாற்றிய சில்லாலை பங்கு மண்ணைச் சேர்ந்த ஏ.சி.கிறிஸ்தோப்பர் அடிகளார்; (1942) மண்டைதீவு பங்;கைப் பிறப்பிடமாகக் கொண்ட ஏ.பி.தேவசகாயம் அடிகளார்; (1942) ஏழாலை மண்ணின் மைந்தர் ஆர். எம்.ஜீ.நேசநாயகம் அடிகளார் (1939) ஆகிய மூன்று மூத்த பொன் விழா நாயகர்களை வாழ்த்தும் நிகழ்வு யாழ் மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் அண்மையில் நடைபெற்றது.

ஏ.சி.கிறிஸ்தோப்பர் அடிகளார்; உதவிப் பங்குத்தந்தையாக கிளிநொச்சி (1969 - 1972) முருங்கன் (1972) ஆகிய பங்குகளிலும் பங்குத்தந்தையாக பண்டிவிரிச்சான் (1972 - 1974) பருத்தித்துறை (1974 - 1978) வங்காலை (1978 - 1981) மானிப்பாய் (1981 - 1985) ஆகிய பங்குகளில் பணியாற்றினார். யாழ் மறைமாவட்ட நிதியாளராக (1985 - 1991) பணியாற்றிய பின்னர் ஜெருசலேமில் (1991) ஓராண்டு மேற்படிப்பை மேற்கொண்டார்.

பின்னர் கரவெட்டி (1992) நெடுந்தீவு (1992-1995) யாழ் புனிதமரியன்னை பேராலயம் (1995 - 2000) மாதகல் (2000 - 2004) கரம்பொன் (2004 - 2006) இளவாலை (2006 - 2007) சுண்டிக்குளி (2012 - 2016) கொழும்புத்துறை (2016 - 2018) கொழும்புத்துறை ஆகிய பங்குகளில் பணியாற்றிய பின்னர் ஆயர் இல்லத்தில் தங்கியிருக்கிறார்.

ஏ.பி.தேவசகாயம் அடிகளார் உதவிப் பங்குத்தந்தையாக யாழ் புனித மரியன்னை பேராலயம் (1969 - 1971) நானாட்டான் (1971 - 1974) நாவாந்துறை (1974 - 1977) ஆகிய பங்குகளில் பணியாற்றினார். பின்னர் பங்குத்தந்தையாக பேசாலை (1977) – அடம்பன் – மன்னார் புனித செபஸ்தியார் பேராலயம் – வவுனியா ஆகிய இடங்களில் பணியாற்றி சபற்றிக்கல் லீவு எடுத்து வெளிநாடு சென்றார். திரும்பி வந்து மடுப்பதி பரிபாலகராக பணியாற்றிய பின்னர் யாழ் மறைமாவட்டம் வந்து கிளிநொச்சி பங்குத் தந்தையாகவும் மறைக்கோட்ட முதல்வராகவும் பணியாற்றினார்.

பின்னர் இளவாலை பங்குத் தந்தையாகவும் மறைக்கோட்ட முதல்வராகவும் (2005 - 2010) பணியாற்றினார். பின்னர் கொய்யாத்தோட்டம் (2010 - 2016) நல்லூர் (2016 - 2018) பணியாற்றி தற்போது 2018 ஆம் ஆண்டு முதல் றக்கா றோட் புனித திரேசா ஆலயத்தில் பணியாற்றுகிறார்.

ஆர்.எம்.ஜீ.நேசநாயகம் அடிகளார் புனித பத்திரிசியார் கல்லூரி நிதியாளர் (1969 - 1970) புதுக்குடியிருப்பு (1970 - 1972) கிளிநொச்சி டீ 8 மாணவர் இல்லம் (1972 - 1974) பேசாலை தலைமன்னார் (1974 - 1977) நாவாந்துறை (1977 - 1981) உரும்பிராய் (1981 - 1984) கரவெட்டி (1985) ஆகிய இடங்களில் பணியாற்றிய பின்னர் யாழ் மறைக்கல்வி நடுநிலைய இயக்குநராக (1985 - 1989) பணியாற்றினார். பருத்தித்துறை (1989 - 1992) குருநகர் (1992 - 1996) சாவகச்சேரி (1996 - 1998) சுண்டிக்குளி (1998 - 2003) பெரிய விளான் (2003 - 2008) மாதகல் (2008 - 2009) ஆகிய இடங்களில் பணியாற்றி பண்டத்தரிப்பிலும் பின்னர் எமில் ஓய்வு பெற்றோர் இல்லத்திலும் தங்கியுள்ளார்.

## உண்மையின் எண்ணங்கள்

அழகு ததும்பும் புன்னகை – வாய்விட்டு சிரித்தால் மீண்டும் எப்போது சிரிப்பார் என ஏக்கமுற வைக்கும் சிரிப்பு – தங்கத் தாத்தா என அழைக்கத் தோன்றும் வெண்முடி கொண்ட முகம் – அன்பான மென்மையான அணுகுமுறை – கடமையே கண் என செயற்படும் நேர்மை – அன்புகளின் உறவுக்காக உலகை விற்கும் ஆளுமை – இன்றும் இளமையும் துடிப்பும் மிக்க செயற்பாடு கொண்ட ஏ.சி.கிறிஸ்தோப்பர் அடிகளாரை வாழ்த்துவோம்

அன்பொழுகும் சாந்தமான முகம் – மின்னல் அடித்தது போன்ற புன்சிரிப்பு – எல்லோரும் சமம் என மதிப்பும் மரியாதையும் தரும் மனதாபிமானம் – எதையும் பதற்றமின்றி கவனமாக கையாளும் தன்மை – கடமைக்கு என்றும் முதலிடம் தரும் ஏ.பி.தேவசகாயம் அடிகளாரை வாழ்த்துவோம்.

சாந்தம் தவழும் முகம் – பார்வையில் கவனம் – கடமையில் நிதானம் – என்றும் பணி நோக்கு – எல்லோரையும் அன்பால் கட்டியாளும் நேசத் தந்தைக்குரிய பாசம் – ஆர்ப்பாட்டத்துடன் அனைத்தையும் அணுகும் ஆளுமை ஆர்.எம்.ஜீ.நேசநாயகம் அடிகளாரை வாழ்த்துவோம்.

## யாழ் மறை மாவட்ட பொதுநிலையினர் கழகத்தினர் ஆயருடன் சந்திப்பு



யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் கழக மாதாந்த ஒன்றுகூடல் அண்மையில் யாழ் மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெற்றது. யாழ் மறைமாவட்ட ஆறு மறைக்கோட்ட பிரதிநிதிகளும் கலந்து கொண்ட மேற்படி ஒன்றுகூடலில் 2019ஆம் ஆண்டுக்கான செயற்றிட்டங்கள் அடங்கிய அறிக்கை இயக்குநரால் மறைக்கோட்ட பிரதிநிதிகளிடம் வழங்கப்பட்டது. ஆண்டின் தொடக்கத்தில் நடை பெற்ற முதலாவது கூட்டம் என்பதால் வழமை போன்று ஆயருடனான சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 2019ஆம் ஆண்டின் செயற்பாடுகள் தொடர்பாக ஆயர் மேதகு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் கேட்டறிந்து தனகு சிறப்பு உரையில் ஆலோசனைகளையும் வழங்கினார்.

## புனித பூமியிலிருந்து பத்து இலட்சம் செபமாலைகள் பனாமா உலக இளையோர் நாளுக்கு



பானமா நாட்டில் 22 ஜனவரி முதல் 27 வரை நடைபெறவுள்ள 34ஆவது உலக இளையோர் நாள் நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் உலக இளையோர்க்குப் பரிசாக அளிப்பதற்கென புனித பூமியிலிருந்து பத்து இலட்சத்திற்கு மேற்பட்ட செபமாலைகள் அந்நாட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளன. துன்புறும் மற்றும் தேவையில் இருக்கும் திருஅவைகளுக்கு உதவுகின்ற பாப்பிறை அமைப்பு என்ற திட்டத்தின்கீழ் திருக்கல்லறை அமைப்பின் நிதி ஆதரவுடன் பெத்லகேம் இளம் தொழிலாளர்களைக் கொண்டு ஆயிரக்கணக்கான செபமாலைகளைத் தயாரித்தது.

பெத்லகேமில் வாரத்திற்கு 2ஆயிரத்து 220 செபமாலைகள் என 800 தொழிலாளர்களால் பத்து இலட்சத்திற்கு அதிகமான செபமாலைகள் தயாரிக்கப்பட்டன. மூன்று செபமாலைகள் திருத்தந்தையின் படத்துடன் ஒரு பளிங்குநிறத் தாளில் வைத்து சுற்றப்பட்டு இளையோர் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மூன்றில் ஒன்றைத் தாங்கள் வைத்துக்கொண்டு, மற்றொன்றை அதைப் பெறாமல் இருப்பவர்களுக்கு அளிக்கவும் மூன்றாவதை தங்களுடன் வீடுகளுக்கு எடுத்துச் சென்று, தங்கள் வயதுடைய இளையோர்க்கு அளிக்கவும் பரிந்துரைக்கப்படுவார்கள் எனவும் கூறப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir



# ஜனாதிபதித் தேர்தலே இப்போது அவசியம்

## முஜிபுர் ரஹ்மான் கோரிக்கை

கொழும்பு, ஜன. 27

ஜனாதிபதி தேர்தலுக்கான அவசியமே நாட்டில் தற்போது காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மாகாண சபைத் தேர்தல் தாமதமாவதை ஏற்றுக் கொள்கின்றோம். ஆனாலும், தேர்தலை தாமதப்படுத்துவதற்கான அவசியம் எமக்கில்லை. தேசிய அரசின்போது யாருடைய தேவைக்காகத் தேர்தல் பிற்போடப்பட்டது என்று தெரியும்.

தேர்தலை நடத்துவதில் எவ்வித சிக்கலும் இல்லை. மாகாண சபை புதிய முறையில் நடத்துவது தாமதமாயின் பழைய முறையில் நடத்துவோம். அதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை.

நாட்டில் அரசியல் நெருக்கடி காணப்படுவதாகவே எதிர்க்கட்சிகள் கூறிவருகின்றன. அவ்வாறாயின் ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்வோம். எம்மைப் பொறுத்தவரை நாட்டில் எவ்வித நெருக்கடிகளோ, குழப்பங்களோ இல்லை. ஆனால், எதிர்க்கட்சிகள் நெருக்கடி இருப்பதாகக் கூறுவார்களாயின் மாகாண சபைத் தேர்தலை அல்ல ஜனாதிபதித் தேர்தலையே அவர்கள் கோரவேண்டும் – என்றார்.(ஐ)



## தேயிலை உற்பத்தி வீழ்ச்சி

கொழும்பு, ஜன. 27

கடந்த ஆண்டில் இலங்கையில் உள்நாட்டு தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2017ஆம் ஆண்டு 30.7 கோடி கிலோகிராம் தேயிலை உற்பத்தி இடம்பெற்றுள்ளதுடன், 2018 ஆம் ஆண்டு அது 40 இலட்சம் கிலோகிராமால் குறைவடைந்துள்ளது.

வறட்சி, இரசாயனப் பதார்த்தங்களின் பயன்பாடு மற்றும் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினை ஆகியன தேயிலை உற்பத்தி வீழ்ச்சிக்குக் காரணமாகியுள்ளன. (ஐ)

## ஞானசாரருக்கு பொதுமன்னிப்பு; புத்தசாசன அமைச்சும் பரிந்துரை

கொழும்பு, ஜன. 27

பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரருக்குப் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், புத்த சாசன அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் புத்தசாசன அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

மகாநாயக்க தேரர்கள் மற்றும் இந்து சம்மேளனத்தின் தலைவர் டி. அருண்காந்த உள்ளிட்டவர்கள் வெவ்வேறாக சுதந்திர தினத்தன்று ஞானசார தேரருக்குப் பொது மன்னிப்பு வழங்குவது தொடர்பில் கோரிக்கை விடுத்துள்ளனர் என்றும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை,ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்கவும் மேற்படி கோரிக்கையை ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

புத்தசாசன அமைச்சர் காமினி ஜயவிக்கிரமபெரேரா, ஐக்கிய தேசியக் கட்சியின்சிரேஷ்ட உபதலைவர்களுள் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.தே.க. பிரதிச் செயலாளராக ருவான் விஜேவர்தன நியமனம்



கொழும்பு, ஜன. 27

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளராக, கட்சியின் செயற்குழு நியமித்துள்ளது.

அத்துடன், அமைச்சர் சாகல ரத்நாயக்க கட்சியின் உள்ளக நடவடிக்கைக்குப் பொறுப்பான செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐ.தே.க தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில், கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில், கடந்த வியாழன் இரவு இடம்பெற்ற செயற்குழுக் கூட்டத்தின்போதே, இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன.

இதன்போது, எதிர்வரும் தேர்தல்களை எதிர்கொள்வதற்காக முறையான வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்கும் பொறுப்பு, அமைச்சர் கபீர் ஹாசிமுக்கு வழங்கப்பட்டுள்ள அதேவேளை, இந்த வேலைத்திட்டத்தை, கட்சியின் அதிகாரிகள் சபையில் முன்வைத்து, பின்னர் செயற்குழுவிடம் சமர்ப்பித்து அனுமதி பெறப்பட வேண்டுமெனவும் யோசனை முன்வைக்கப்பட்டது.

அத்துடன், கம்பெரலிய வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்கும் முறைமை தொடர்பிலும் இதன்போது தீர்க்கமாக ஆராயப்பட்டது.

# வழிப்பறிக் கொள்ளையனுக்கு 11 வழக்குகளில் விளக்கமறியல்

## நகைக் கடை உரிமையாளரும் சிறையில்

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்று வந்த வழிப்பறி உள்ளிட்ட நகைக் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவருக்கு எதிராக 11 வழக்குகளை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் தாக்கல் செய்தனர்.

அத்தனை வழக்குகளிலும் சந்தேகநபரை அடையாள அணிவகுப்புக்குட்படுத்த உத்தரவிட்ட யாழ்ப்பாணம் நீதிமன்ற மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன், அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

அத்துடன் அவரிடமிருந்து நகைகளைக் கொள்வனவு செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நகைக் கடை உரிமையாளரையும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல இடங்களிலும் அண்மைய நாள்களில் வழிப்பறிகளும் நகைக் கொள்ளைகளும் இடம்பெற்று வந்தன. இந்தச் சம்பவங்கள் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வந்திருந்தனர்.

இந்நிலையில் நகைக் கொள்ளைகளுடன் தொடர்புடைய ஒருவரையும் அந்த நகைகளை உருக்கிக் கொடுக்கின்ற ஒருவரையும் கடந்த வியாழக்கிழமை பொலிஸார் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றும் களவாடப்பட்ட – கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் என சந்தேகிக்கப்படும் சுமார் 8 இலட்சம் ரூபா பெறுமதியான 15 பவுண் நகைகளும் மீட்கப்பட்டன.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்கள் இருவரையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் கடந்த வியாழனன்று முற்படுத்தினர். 11 கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் தனித்தனியே வழக்குகளைப் பொலிஸார் தாக்கல் செய்திருந்தனர்.

நகைக் கடை உரிமையாளர் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி மு.றெமிடியஸ், பிணை விண்ணப்பத்தை மன்றில் முன்வைத்தார். எனினும் வழக்கு விசாரணைகளின்போது சாட்சிகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் நகைக் கடை உரிமையாளருக்குப் பிணை வழங்க மறுத்த யாழ்ப்பாணம் நீதிமன்ற மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன், சந்தேகநபர்கள் இருவரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

அத்துடன், கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை அடுத்த தவணையின் போது அடையாள அணிவகுப்புக்குட்படுத்த முறைப்பாட்டாளர்களை மன்றில் முன்னிலையாகுமாறும் நீதிமன்று உத்தரவிட்டது. (ஐ – 07)

# அனுமதியின்றி ஆடு வெட்டியவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 27

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனகம்புளியடிப் பகுதியில் சட்டவிரோதமாக ஆடு ஒன்றை வெட்டி இறைச்சியாக்க முற்பட்டவரை சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த வியாழன் மாலை சாவகச்சேரிப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்தே அந்த நபரைக் கைது செய்துள்ளனர்.

இதேவேளை, சாவகச்சேரி மடத்தடிப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றிப் பனை மரங்களை தறித்த சந்தேகநபர் ஒருவரையும் சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தக் கைது நடவடிக்கைகளைச் சாவகச்சேரி பொலிஸ் நிலைய சப் இன்ஸ்பெக்டர் பரிசோதகர் இ.சேந்தன் தலைமையிலான பொலிஸ் அணியினர் மேற்கொண்டனர். (ஐ

# வழித்தட அனுமதியின்றி யாழ்.- கொழும்பு சேவையில் ஈடுபட்ட அதிசொகுசு பஸ் உரிமையாளருக்கு சிறை; ரூ. 1 லட்சம் தண்டம்

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாணம் – கொழும்பு இடையே வழித்தட அனுமதிப்பத்திரமின்றி அதிசொகுசு பயணிகள் பஸ் சேவையில் ஈடுபட்ட தனியார் பஸ் உரிமையாளருக்கு 6 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்து யாழ்ப்பாணம் நீதிமன்ற மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன் நேற்று முன்தினம் தீர்ப்பளித்தார்.

பஸ் உரிமையாளரின் சிறைத் தண்டனையை 2 ஆண்டுகளுக்கு ஒத்திவைத்த நீதிமன்று ஒரு லட்சம் ரூபா தண்டம் செலுத்துமாறு உத்தரவிட்டது.

தண்டப்பணத்தைச் செலுத்தத்தவறின் குற்றவாளி 6 மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்கவேண்டும் என்றும் மன்று கட்டளையிட்டது.

யாழ்ப்பாணம் – கொழும்பு இடையே அதிசொகுசு பஸ் சேவையில் ஈடுபட்ட தனியார் பஸ்ஸிடம் வழித்தட அனுமதிப்பத்திரம் இல்லை என்று பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டது. 2018ஆம் ஆண்டு நடுப்பகுதியில் அந்த பஸ்ஸின் உரிமையாளருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான்நீதிமன்றில்பொலிஸாரால்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

பஸ் உரிமையாளர், அப்போது தான் சுற்றவாளி என்று மன்றில் கூறினார். அதனால் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டு வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. அதன்போது தனக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களில் தான் குற்றவாளி என்று பஸ் உரிமையாளர் கூறினார்.

அதன்போதே நீதிவான் தண்டனைத் தீர்ப்பை வழங்கினார். (ஐ – 07)



# இலங்கை படு தோல்வி

பிரிஸ்பேன்,ஜன.27

பிரிஸ்பேனில் நடைபெற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை 40 ஓட்டங்கள் மற்றும் ஒரு இனிங்ஸால் படுதோல்வியடைந்தது.

நாணயச்சுழற்சியில் வென்று தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஆஸி பந்து வீச்சாளர்களுக்கு பணிந்து 144 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இலங்கை அணி சார்பில் டிக்வெல்ல 64,திரிமன்னே24 ஓட்டங்களை கூடுதலாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கம்மின்ஸ் 4,றிச்சட்ஸன் 3,ஸ்ராக்2,லயன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குதனது முதல் இனிங்ஸை ஆரம்பித்த ஆஸி அணி புஸ்சேஞ்ச்(81)ஹெட்(84)ஹரீஸ்(44) ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தால் 323 ஓட்டங்களை எடுத்து வலுவான நிலையிலிருந்தது.

இலங்கை அணி சார்பில் சுரங்க லக்மால் 5, டில்ருவான் பெரேரா 2விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

179 ஓட்டங்கள் பின்னிலையில் இருந்த இலங்கை அணி தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்தது.எனினும் கம்மின்ஸின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் இலங்கை அணி வீரர்கள் வந்த வேகத்தில் நடையைக் கட்டினர்.

இதனால் இலங்கை அணி 139 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து படுதோல்வியடைந்தது.இலங்கை அணி சார்பில் திரிமன்னே 32,டிக்வெல்ல 24 ஓட்டங்களை கூடுதலாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் கம்மின்ஸ் 06,றிச்சட்சன் 02,லயன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

முதல் இனிங்ஸில் 4 விக்கெட்டுக்களையும் இரண்டாவது இனிங்ஸில் 6 விக்கெட்டுக்ளையும் அள்ளிய கம்மின்ஸ் ஆட்டநாயகனாக தெரிவானார்.

# இரண்டாவது போட்டியிலும் வென்றது இந்தியா

நியூஸிலாந்து அணிக்கு எதிராக நேற்று நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியில் இந்தியா 90 ஓட்டங்களால் வெற்றிபெற்று 5 போட்டிகள் கொண்ட தொடரில் 2:0 என முன்னிலை பெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்தியா துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. தொடக்க வீரர்களாக களமிறங்கிய ஷிகர் தவான், ரோகித் சர்மா இருவரும் அதிரடியாக விளையாடினார்கள். அரை சதம் கடந்த இருவரும், நியூசிலாந்து பந்து வீச்சை சிதறடித்து, ஓட்டங்களை குவித்தனர். ஷிகர் தவான் 66 , ரோகித் சர்மா 87 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தனர்.

அதன்பின்னர் களமிறங்கிய விராட் கோலி 43 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தாலும், அம்பதி ராயுடு மற்றும் டோனி இருவரும் அணியின் ஸ்கோரை மேலும் உயர்த்தினர். ராயுடு 47 ஓட்டங்களில் ஆட்டமிழந்ததார்.

50 ஓவர் முடிவில் இந்திய அணி 4 விக்கெட் இழப்புக்கு 324 ஓட்டங்கள் குவித்தது. கடைசி நேரத்தில் பந்துகளை பறக்கவிட்ட கேதர் ஜாதவ், 3 பவுண்டரி ஒரு சிக்சருடன், 22 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். டோனி 48 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

பதிலுக்கு 325 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கியது நியூஸிலாந்து அணி.அவ்வணி சார்பாக குப்தில், முன்றோ இருவரும் ஆட்டத்தை ஆரம்பித்தனர்.எனினும் 15 ஓட்டங்கள் பெற்றிருந்த குப்தில், புவனேஸ்வரகுமார் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வில்லியம்சன் வந்தார். எனினும் அவரையும் நிலைத்துநிற்க சமி விடவில்லை.அவர் 20 ஓட்டத்துடன் வெளியேறினார்.அவரையடுத்து முன்றோவுடன் இணைந்தார் ரெய்லர்.சிறப்பாக ஆடிவந்த முன்றோவை 31 ஓட்டங்களுடன் வெளியேற்றினார் யாதவ்.

எனினும் அடுத்து வந்த ரெய்லர், லதாம், நிக்கோலஸ்,சோதி ஆகியோரை தனது சுழலால் வெளியேற்றினார் குல்தீவ் யாதவ்.

எனினும் பின்வரிசை வீரராக வந்த பிறேஸ்வெல் அதிரடி காட்டினார்.இவர் 46 பந்துகளில் 3 சிக்ஸர்கள்,5 பவுண்டரிகள் அடங்கலாக 57 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் புவனேஸ்குமார் பந்தில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் நியூஸிலாந்து அணி 40.2 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 234 ஓட்டங்களைப்பெற்று 90 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் குல்தீவ் யாதவ் 4, புவனேஸ்வர்குமார்,சாகல் இருவரும் தலா2, சமி,யாதவ் இருவரும் தலா ஒரு விக் கெட்டை கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக ரோகித் சர்மா தெரிவானார்.

# ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் இறுதிப் போட்டியில் நடாலை எதிர்கொள்கிறார் ஜோகோவிச்



மெல்போர்ன்,ஜன.27

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸில் ஜோகோவிச், லூகாஸ் பவுலியை நேர்செட் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிசில் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவின் அரையிறுதி ஆட்டத்தில் முதல்நிலை வீரரான நோவக் ஜோகோவிச் பிரான்ஸின் லூகாஸ் பவுலியை எதிர்கொண்டார். முதல்நிலை வீரரான ஜோகோவிச் ஆட்டத்துக்கு 28ஆம் நிலை வீரரான லூகாஸ் பவுலியால் ஈடுகொடுக்க முடியவில்லை.

இதனால் ஜோகோவிச் 6:0, 6:2, 6:2 என நேர்செட் கணக்கில் எளிதாக வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

# மூன்றாவது ஒருநாள் போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்திய தென்னாபிரிக்கா

பாகிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 2:1 என முன்னிலை பெற்றது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கு இடையே 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர் நடைபெற்று வருகிறது. ஏற்கனவே இரண்டு போட்டிகள் முடிந்துள்ள நிலையில், இரு அணிகளும் 1:1 என சமநிலையில் இருந்தன.

இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் போட்டி செஞ்சூரியனில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. தொடக்க ஆட்டக்காரர்களாக இமாம் உல் ஹக், பகர் சமான் ஆகியோர் களமிறங்கினர்.

பகர் சமான் 2 ஓட்டங்களில் ஆட்டமிழந்து அதிர்ச்சி அளித்தார். அடுத்து இறங்கிய பாபர் அசாம் இமால் அல் ஹக்குடன் இணைந்தார். இருவரும் நிதானமாக ஆடி அணியின் எண்ணிக்கையை உயர்த்தினர். 2ஆவது விக்கெட்டுக்கு 132 ஓட்டங்கள் சேர்த்தனர்.

பொறுப்புடன் ஆடி அரை சதமடித்த பாபர் அசாம் 69 ஓட்டங்களில் வெளியேறினார். அடுத்து இறங்கிய மொகமது ஹபீஸும் அரை சதமடித்தார். அவர் 52 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

ஒருபுறம் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும் இமாம் உல் ஹக் நிலைத்து நின்று ஆடி தனது ஐந்தாவது சதத்தை பதிவுசெய்தார். அவர் 116 பந்துகளில் 101 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

கடைசி கட்டத்தில் இமாத் வாசிம் அதிரடியாக ஆட பாகிஸ்தான் அணியின் எண்ணிக்கை மளமளவென உயர்ந்தது. வாசிம் 23 பந்துகளில் 43 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இறுதியில், பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 317 ஓட்டங்கள் எடுத்தது. தென்னாபிரிக்கா சார்பில் ஸ்டெயின், ரபடா தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

இதையடுத்து, 318 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, 2 விக்கெட் இழப்புக்கு 88 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது மழை பெய்ததால் ஆட்டம் பாதிக்கப்பட்டது. சிறிது நேரம் ஆட்டம் நிறுத்தப்பட்டு, மீண்டும் தொடங்கப்பட்டது. அதன்பின் சிறிது நேரத்தில் மீண்டும் மழை பெய்தது.



தென்னாரிக்க அணி 33 ஓவரில் 2 விக்கெட்டுக்கு 187 ஓட்டங்கள்எடுத்த போது பலத்த மழை பெய்தது. அப்போது அணியின் வெற்றிக்கு 102 பந்தில் 131 ஓட்டங்கள் தேவை என்ற நிலை இருந்தது. ஆனால் தொடர்ந்து மழை நீடித்ததால் அத்துடன் ஆட்டத்தை முடித்துக் கொள்ள நடுவர்கள் முடிவு செய்தனர். பின் டக்வொர்த் லீவிஸ் முறைப்படி தென்னாபிரிக்க அணி 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஆட்டமிழக்காமல் 83ஓட்டங்கள் குவித்த ரீஸா ஹென்றிக்ஸ் ஆட்ட நாயகனாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## எமது நிலம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டத்தை முன்னெடுத்தனர்.

முள்ளிவளைப் பொலிஸாரால், கேப்பாபிலவுப் போராட்டத்துக்கு தலைமை தாங்குபவர்கள் எனக் குறிப்பிட்டு பெண்கள் இருவருக்கு எதிராக, நேற்று முன்தினம் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. எனினும் ஜனநாயக வழியில் போராட்டத்தை முன்னெடுக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது.

இந்நிலையில் நேற்று மக்கள் ஜனநாயக வழியில் தமது நிலங்களைக் கோரிப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மக்களின் போராட்டத்துக்கு அச்சுறுத்தல் விடும் வகையில் கனரக வாகனங்கள், ஜீப் மற்றும் பஸ்கள் போன்றவற்றில், பல இடங்களிலுமிருந்து பொலிஸார் வரவழைக்கப்பட்டு போராட்ட இடத்தில் குவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் இராணுவ முகாம் வாயில், பாதுகாப்புதடை இடப்பட்டுப்பொலிஸார்பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுமிருந்தனர்.

அதேவேளை, ஆர்ப்பாட்டக்காரர்கள் இராணுவ முகாமுக்கு எதிராக, வீதியின் மறுபுறம் மதிய உணவு சமைப்பதற்கு முற்பட்டவேளை, இராணுவ முகாமுக்கு முன் உணவு சமைக்க முடியாதெனப் பொலிஸார் தடுத்தனர்.

அதனால் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டு, பின் உணவு சமைக்க அனுமதி வழங்கிய நிலையில் மதிய உணவும் மக்களால் இராணுவ முகாமுக்கு எதிரே சமைக்கப்பட்டது.

ஆர்ப்பாட்ட இடத்திற்கு வருகை தந்த கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர், தாம் தொடர்ந்தும் இது தொடர்பாகக் கரிசனையுடன் செயற்படுவதாக ஆர்ப்பாட்டக்காரர்களிடம் கூறினார். ஆயினும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மிகவும் கொதிப்புடன் இருந்ததால், அவர்களின் நிலைப்பாட்டை அரச அதிபரிடம் தெரிவிப்பதாகக் கூறிச் சென்றார்.

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்கள் சிலரும் மக்களோடு இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புதிய அரசமைப்பால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டைப் பிரிக்கும் சமஷ்டிக்கான அடிப்படைகள் அந்த அரசமைப்பில் உள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

சிங்கள நாளிதழ் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

புதிய அரசமைப்பின்படி அதிகாரமுடைய ஜனாதிபதியொருவர் இருக்கமாட்டார். அதேபோன்று அதிகாரங்கள் குவிந்துள்ள நாடாளுமன்றமும் இருக்காது. இந்நிலையில் மத்திய அரசு பலவீனப்படுத்தப்பட்டு மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் அனைத்தும் வழங்கப்பட்டு அவை மேலும் பலப்படுத்தப்படும். இது நாட்டை மிக ஆபத்தான நிலைக்கு இட்டுச் செல்லும்.

இதனைச் சமஷ்டி அரசமைப்பு என்று கூறமாட்டார்கள். வேறு ஏதேனும் பெயர்கள் மூலம் அழைக்கின்றார்கள். புதிய அரசமைப்பின் பெயரில் குழப்பம் இல்லை. சொற்களில் குழப்பம் இல்லை. ஆனால் அந்த அரசமைப்பின் வியூகத்திலேயே குழப்ப நிலையும், நாட்டைப் பிரிக்கும் சமஷ்டிக்கான அடிப்படைகளும் உள்ளன – என்றார். (ஐ)

## 110 கிலோ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டைய கஞ்சா போதைப்பொருள் பொதிகளைக் கடத்த முற்பட்ட குற்றச்சாட்டில் 3 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படையினரால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் சந்தேகநபர்கள் நேற்றுப் பிற்பகல் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபர்கள் மூவரும் கஞ்சா போதைப்பொருளை வேறு இடத்துக்குக் கடத்த முற்பட்டபோதே கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. விசாரணைகளின் பின்னரே மேலதிக விவரம் தெரியவரும் என்றும் பொலிஸார் கூறினர். (ஐ-07)

## கோட்டாபயவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தன்னிடம் கூறியிருக்கிறார் என முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிங்கள வார இதழுக்கு வழங்கியுள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

அமெரிக்கக் குடியுரிமைப் பிரச்சினை பெரும்பாலும் தீர்க்கப்பட்டு விட்டது.

அத்துடன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடமாட்டார். அதனால் எந்தப் பிரச்சினையும் இல்லை – என்றார்.

அதேவேளை, கோட்டாபய ராஜபக்ஷவின் இந்தக் கருத்தை ஜனாதிபதி செயலக மூத்த அதிகாரி ஒருவர் மறுத்துள்ளார் எனக் கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி சிறிசேன அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு, மஹிந்த ராஜபக்ஷ ஆதரவு தரவதாக வாக்குறுதி அளித்திருக்கிறார் எனவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மைத்திரிபால சிறிசேனவுக்கு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவு தர மறுத்தால், அந்தக் கட்சியுடனான கூட்டணிக்கு வாய்ப்பில்லை என, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் மஹிந்த சமரசிங்கவும் கூறியுள்ளார். (ஐ)

## 249 ஆசிரியர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றிடங்களுக்குப் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்குதல், வடக்கு மாகாண அலுவலகங்களில் நிலவும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் வேலை மேற்பார்வையாளர் நியமனம் வழங்கும் நிகழ்வு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் நேற்று யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்றது.

இதனடிப்படையில் 249 ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்களும் 33 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான நியமன கடிதங்களும் 10 வேலை மேற்பார்வையாளர்களுக்கான நியமனக் கடிதங்களும் இந்த நிகழ்வின்போது வழங்கப்பட்டன.

ஆளுநரின் செயலாளர் எல். இளங்கோவன், வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் ஏ. பத்திநாதன், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், மாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட பெருமளவானோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஐ-07)

## சு.க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரிபால சிறிசேன அடுத்து தாய்லாந்துக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ளார் என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

பிலிப்பைன்ஸுக்கு ஐந்து நாட்கள் பயணத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதையடுத்து, தற்போது சிங்கப்பூருக்குச் சென்றுள்ளார்.

அங்கிருந்து திரும்பிய பின்னர், அவர் தாய்லாந்துக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதி இந்த மாதத்தில் மேற்கொள்ளவிருக்கும் மூன்றாவது வெளிநாட்டுப் பயணம் இதுவாகும்.

அதேவேளை, சிங்கப்பூர் பயணத்தின்போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது அதிகாரபூர்வக் குழுவில், அரச தரப்பைச் சேர்ந்த அமைச்சர்கள் எவரையும் உள்ளடக்கவில்லை.

சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாசிறி ஜயசேகர, எஸ்.பி.திசநாயக்க ஆகியோரை அழைத்துச் சென்றுள்ளார். இவர்கள் ஜனாதிபதியுடன் அதிகாரபூர்வப் பேச்சுக்களில் கலந்து கொண்டுள்ளனர்.

ஏற்கனவே பிலிப்பைன்ஸ் பயணத்தின்போது, சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏழு பேரை அழைத்துச் சென்றிருந்தார்.

இது கடுமையான விமர்சனங்களை ஏற்படுத்திய நிலையில், மீண்டும் சிங்கப்பூருக்கும் தமது கட்சி உறுப்பினர்களை அழைத்துச் சென்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிரிட்டனில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெர்னாண்டோ தேடப்பட்டு வரும் நபராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

பிரிட்டனின் வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றின் நீதிவான் சோனியா ஹென்சலேவினால் , பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ தேடப்பட்டு வருவோர் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளார்.

பிரிட்டனின் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் தேடப்படும் நபர் பற்றிய விவரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பிரிகேடியர் பிரியங்கவுக்கு எதிராகப் புலம்பெயர் சமூகத்தினால் தொடுக்கப்பட்ட வழக்குக்கு, இலங்கை வெளிவிவகார அமைச்சு சட்டத்தரணி ஒருவரை முன்னிலைப்படுத்தாமையே இந்த நிலைக்கான காரணம் எனச் சிங்கள ஊடகமொன்று குற்றம் சுமத்தியுள்ளது.

சட்டத்தரணி ஒருவரை முன்னிலைப்படுத்தாமல், நீதிவானின் தீர்ப்பைக் கண்டிப்பதாக கூறுவது நகைப்பிற்குரியது என உலக இலங்கை அமைப்பின் சட்டத்தரணி ஒருவர் கூறியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மன்னார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்திலுள்ள பீட்டா நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த மாதிரிகள் எந்தக் காலப் பகுதிக்குரியவை என்பதை உறுதிப்படுத்துவதற்கான கார்பன் பரிசோதனைகள் அங்கு மேற்கொள்ளப்படவுள்ளன.

மன்னார், சதொச வளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியில் இருந்து இதுவரை 294 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

இவற்றில் தெரிவு செய்யப்பட்ட 6 மாதிரிகள் மேலதிக ஆய்வுகளுக்காக அமெரிக்காவுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

சட்ட வைத்திய நிபுணர் சமிந்த ராஜபக்ஷ, காணாமற்போனோர் அலுவலகத்தின் ஆணையாளர் மிராக் ரஹீம் உள்ளிட்ட குழுவினரால் இந்த மாதிரிகள் ஆய்வுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த எச்சங்களின் கார்பன் பரிசோதனை முடிவுகள் இன்னும் மூன்று வாரங்களுக்குள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

## சந்திரிக்கா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பொன்று நடைபெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பிலேயே இதன்போது பேசப்பட்டுள்ளதாகவும், சந்திரிகாவின் சார்பில் அவரால் அனுப்பட்ட சிறப்புப் பிரதிநிதியொருவரே சந்திப்பில் கலந்துகொண்டுள்ளார் என்றும் தெரியவருகின்றது.

குமார வெல்கமவின் நிலைப்பாடு என்னவாகவுள்ளது என்பதை துப்பறியும் நோக்கிலேயே தான் நேரில் களமிறங்காது தனது பிரதிநிதியொருவரைச் சந்திரிகா அம்மையார் பேச்சுக்கு அனுப்பியுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்தை குமார வெல்கம எம்.பி. கடுமையாக விமர்சித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புதிய அரசமைப்பை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என எதிர்க் கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாரஹேன்பிட்டிய, அபேராம விகாரையில் நேற்று இடம்பெற்ற சமய நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாத அரசுக்கு எதிராக மக்கள் செயற்படவேண்டியது அவசியம்.

வாக்குறுதிகளை நிறைவேற்றாது நாட்டைத் துண்டுகளாகப் பிரித்து காட்டிக் கொடுப்பதற்கு முற்படும் சந்தர்ப்பத்தில் மக்கள் முழுமையாக அதற்கு எதிராக இருப்பார்கள்.

ஆகவே தற்போதைய நிலையில் புதிய அரசமைப்பை சமர்ப்பிக்க முடியாது. அவ்வாறு சமர்ப்பித்தாலும் அவர்களால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறமுடியாது. தற்போது அரசில் உள்ள சிலர் இதனை அரசமைப்பு என்று கூறும்போது சிலர் இதனைச் சட்டவரைவு என அர்த்தப்படுத்துகின்றனர் – என்றார். (ஐ)

## புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குஞ்சுக்குளம் பகுதியிலுள்ள வீடொன்றில் கடந்த வியாழன், 3 பேர் விடுதலைப் புலிகளின் சீருடையுடன் வந்து உணவு கேட்டதாகவும், வீட்டிலுள்ளவர்கள் மறுப்புத் தெரிவித்தமையால் பலாத்காரமாக உணவை எடுத்துச் சாப்பிட்டுவிட்டு, கிணற்றில் குளித்துவிட்டுச் சென்றதாகவும், படையினருக்குத் தகவல் கிடைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனால், நேற்று முன்தினம் முதல் வவுனியா முழுவதிலும் படையினர் தீவிர தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இந்தச் சம்பவத்தினால் வவுனியாவில் பதற்றமான நிலை காணப்பட்டது. சமூகவிரோதிகள் சிலர் திட்டமிட்டு வதந்தியைப் பரப்பியதால் இந்த நிலை ஏற்பட்டிருக்கலாம் என்று அப்பகுதி மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ஐ)

## சுதந்திரக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமை இன்றி ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிர்காலப் பயணம் இருக்காது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரீலங்கா சுதந்திரக் கட்சியை ரீமாவோ பண்டாரநாயக்க, சந்திரிகா குமாரதுங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் பாதுகாத்தனர்.

தற்போது இருக்கின்ற தலைவர் (மைத்திரிபால சிறிசேன) ரீலங்கா சுதந்திரக் கட்சி தொடர்பில் அக்கறை செலுத்துவதில்லை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (ஐ)

## இலங்கைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்த தாக்குதலை, ஐ.நா. பொதுச்செயலர் அன்ரனியோ குட்டரெஸ் கண்டித்துள்ளார்.

உள்ளூர் நேரப்படி நேற்று முன் தினம் காலை 6.30 மணியளவில் இலங்கை இராணுவ வாகனத் தொடரணி ஒன்றின் மீது கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

மாலியின் மத்திய பகுதியில் உள்ள டோன்ட்சா என்ற இடத்தில் நடந்த இந்த தாக்குதலில் கப்டன் உள்ளிட்ட இரண்டு இலங்கைப் படையினர் கொல்லப்பட்டனர்.

மேலும், ஆறு இலங்கைப் படையினர் காயமடைந்தனர் என்று ஐ.நா அறிவித்துள்ளது.

இந்தத் தாக்குதல் குறித்து ஐ.நா. பொதுச்செயலர் அன்ரனியோ குட்டரெஸ் கண்டனம் தெரிவித்திருப்பதுடன், இலங்கை அரசுக்கும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கும் இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. அமைதிப்படையினரை இலக்கு வைக்கும் தாக்குதல்கள் சர்வதேச சட்டங்களின்படி போர்க் குற்றங்களாகக் கருதப்படும் என்று கூறியுள்ள ஐ.நா. பொதுச் செயலர், இந்தத் தாக்குததலின் சூத்திரதாரிகளை அடையாளம் கண்டு விரைவில் நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்று மாலி அதிகாரிகளைக் கேட்டுக்கொள்வதாகவும் கூறியுள்ளார். (ஐ)

## படுகொலையான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியலாளர் சுகிர்தராஜனின் 13ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

அவரது நினைவு தினத்தில் படுகொலைசெய்யப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி இந்த கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு ஊடகவியலாளர்கள் பங்கேற்றனர்.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவாக யாழ்ப்பாணம் அமைக்கப்பட்டுள்ள தூபி முன்பாக நேற்றுக் காலை அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. இதன்போது தூபிக்கு மலர்மாலை அணிவித்துச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதன் பின்னர் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண ஊடக அமையத்தின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் கிழக்கு ஊடக அமையம், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் ஊடக சுதந்திரத்துக்கான செயற்பாட்டுக் குழு, தொழில்சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றியம், மன்னார், வவுனியா, முல்லைதீவு மற்றும் கிளிநொச்சி ஊடகவியலாளர் அமைப்புக்கள் பங்கேற்றன. இதில் பெருமளவான ஊடக வியலாளர்களுடன் அரசியல் பிரதிநிதிகளும் பங்கேற்றனர். (ஐ-07)

# வடக்கு - கிழக்கு மக்களுக்கு இவ்வாண்டு 17,000 வீடுகள்!

## கூட்டமைப்பு - பிரதமர் பேச்சில் இணக்கம்

கொழும்பு, ஜன. 27

வடக்கு – கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2019ஆம் ஆண்டின் இறுதிக்குள் 17 ஆயிரம் வீடுகளை ஒப்படைக்கத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அவரது செயலாளர் மற்றும் ஆலோசகர் ஆகியோருக்கு இடையே சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது, வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.



இது தொடர்பான பேச்சு மிக நீண்ட காலமாகத் தொடர்ந்து வருகின்றபோதிலும், இதுவரை அது சாத்தியப்படாமை குறித்து கூட்டமைப்பு பிரதமர் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளது.

இந்தப் பேச்சுக்கு அமைய 17 ஆயிரம் வீடுகளை இவ்வாண்டுக்குள் மக்களிடம் ஒப்படைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நாமலுக்கு எப்போது திருமணம்? மஹிந்த சொன்ன பதில் இதுதான்



கொழும்பு, ஜன. 27

'நாமல் ராஜபக்ஷவுக்கு எப்போது கல்யாணம்? ஏன் பெண்ணொருத்தியைக் கரம்பிடிக்கத் தயங்குகிறார். என்று பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மஹிந்த ராஜபக்ஷவின் இளைய மகனுக்குக் கடந்த வியாழனன்று மிகவும் எளிமையான முறையில் திருமணம் நடைபெற்றிருந்தது. முக்கிய அரசியல் பிரமுகர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதில் கலந்துகொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மங்கள சமரவீர உட்பட அனைத்து அரசியல் பிரமுகர்களும் மேற்படி வினாவை தொடுத்துள்ளனர்.

இவற்றுக்கு பதிலளித்துள்ள மஹிந்த,

'தம்பிமாரைக் கரை சேர்த்துவிட்டு மணம் முடிக்க மகன் விரும்புகிறார் போல் தெரிகிறது. அதுவும் நல்லதுதாதேன' எனச் சிரித்தபடியே பதிலளித்துள்ளார்.

அப்படியா, எது எப்படியே சீக்கிரம் முடித்து வையுங்கள். அப்போது பக்கபலமாக இருக்கும் என்று சிலர் கூறியுள்ளனர். (ஐ)

# இந்தியக் குடியரசு தினம் நேற்று யாழ்ப்பாணத்தில்





யாழ்ப்பாணம், ஜன. 27

இந்தியாவின் 70ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு நேற்று யாழ்.இந்திய துணைத் தூதரகத்தில் குடியரசு தின நிகழ்வு காலையில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

காலை நிகழ்வுகள் காலை 9.00 மணிக்கு யாழ் இந்தியத் துணைத் தூதுவர் சங்கர் பாலச்சந்திரன் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டன. தூதரக அலுவலர்கள், வடக்கு மாகாணத்தில் வசிக்கும் இந்தியப் பிரஜைகள் மற்றும் இந்திய வம்சாவழியினர், ஊடகவியலாளர்கள் என 80ற்கும் மேற்பட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். இந்திய தேசிய கீதம் இசைக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்திய ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட குடியரசுதின வாழ்த்துச் செய்தி இந்தியத் துணைத் தூதுவரால் வாசித்தளிக்கப்பட்டது. (ஐ-07)

# கொழும்பு - கே.கே.எஸ். இடையிலான உத்தரதேவி சேவை இன்று ஆரம்பம்



கொழும்பு கோட்டை – காங்கேசன்துறை இடையிலான உத்தர தேவி ரயில் சேவை இன்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் ஆரம்பமாகிறது.

உத்தர தேவி இன்று காலை ஆறு மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து காங்கேசன்துறை நோக்கிப் புறப்படும். அதன் சேவையை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, இந்தியத் தூதுவர் தரஞ்சித் சிங் சந்து ஆகியோர் கலந்து கொண்டு ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

724 பயணிகள் ஒரே தடவையில் பயணிக்கும் வசதி கொண்ட இந்தத் ரயிலில் முதலாம் வகுப்புப் பெட்டியும் இரண்டாம் வகுப்புப் பெட்டியும் குளிரூட்டப்பட்டவை.

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட இந்த ரயில் வடக்கு, தெற்கு நல்லிணக்கத்தை குறிக்கும் வகையில் சேவையில் ஈடுபடும் என்று போக்குவரத்து அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த ரயிலின் இன்றைய முதலாவது சேவையில் யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகள், அப்பியாசப் புத்தகங்கள் உள்ளிட்ட பாடசாலை உபகரணங்கள் அனுப்பி வைக்கப்படும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# மரண அறிவித்தல்



## திரு.பரமு மார்க்கண்டு

காரைநகர் களபூமி பொன்னாவளையை பிறப்பிடமாகவும் இல.83/9, தங்சி ஒழுங்கை அரசடி வீதி, கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு.பரமு மார்க்கண்டு அவர்கள் 26.01.2019 சனிக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற பரமு பார்வதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசம்மா அவர்களின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற (வையாபுரி) முருகேசு, பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற வள்ளியம்மையின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற துரைராசா அவர்களின் அன்பு மைத்துனரும் மங்கையர்க்கரசி, சிறீநாதன் மகேஸ்வரி, தனலட்சுமி, சரஸ்வதி, சிறீதரன். விஜயகலா ஆகியோரின் அன்புத்தந்தையும் தில்லைநாதன் காலஞ்சென்ற கங்காதேவி, கௌரிதேவி, கிருபானந்தன், யோகநாதன், காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சுதன், ஷர்மிளா, நிவாசினி, பவதாரணி, பிரணவன், பவித்திரா, திவ்வியா, சிவகஜன் ஆகியோரின் அன்புப்பேரனும் சேஷ்த்ரெனின் அன்புப்பூட்டனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.01.2019 நாளை திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு காலை 9.00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**

**தொலைபேசி : 021 2221983**

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.01.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.